பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 12 புதன்கிழமை (26.06.2002) தொலைபேசி 3378 ஒலி 189

### தமிழ் - முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்த தீய சக்திகள் முயற்சி

# மூதூரில் நடந்த பேரணி மீது இளைஞர் கோஷ்டி தாக்குதல்

## பதற்றத்தைத் தணிக்க ஊரடங்கு அமுல்

(மூதூர் நிருபர்)

**மூதூரில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் தாக்கப்பட்டதையும் வேலணையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்டதையும் கண்டித்து நேற்றுக்காலை 11மணிக்கு மூதூர் நகரில் நடைபெற்ற கண்டனப்பேரணி மீது இளைஞர் குழு ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் மூன்று முஸ்லிம் இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.**

**இத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து மூதூர் நகரில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க நேற்று நண்பகல் ஒரு மணி முதல் இன்று அதிகாலை 6.30 மணிவரை உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு சட்டத்தை பொலிஸார் அமுல்படுத்தியுள்ளனர்.**

மூதூரில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் தாக்கப்பட்டமை குறித்தும் வேலணையில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் தாக்கப்பட்டமை குறித்தும் நேற்று மூதூர் 64ம் கட்டையில் இருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி மீது ஆலிங்கேனை என்னும் இடத்தில் வைத்து இளைஞர் குழு ஒன்று தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து

(02ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழக அனுமதி

## தெரிவான மாணவர்களின் பெயர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களின் பெயர் விபரப்பட்டியல் நேற்று பல்லைக்கழக மானிய ஆணைக்குழுவினால் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

துறை ரீதியாக அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| மருத்துவ பீடம் | - 85 |
| விவசாய பீடம் | - 57 |
| உயிரியல் பீடம் | - 47 |
| பௌதீக பீடம் | - 112 |
| வணிக முகாமைத்துவம் | - 84 |
| வர்த்தகம் | - 44 |
| கலைப்பிரிவு | - 225 |

இதேவேளை கலைப்பரிவுக்கு விசேட ஏற்பாட்டின் கீழ் மேலும் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவரென்றும் (02ம் பக்கம் பார்க்க)

### பரீட்சை முடிவுகள்
## ஆகஸ்ட் 7ல் வெளியாகும்

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7ந் திகதி வெளியிடப்படுமென்று கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிவுகள் வெளியானதும் ஒக்டோபர் மாதத்தில் மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## யாழ். பல்கலைக்கழக மாணவன் கொழும்பில் மரணம்

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட மூன்றாம் வருட மாணவர் ஒருவர் 23ந் திகதி கொழும்பில் மரணமடைந்துள்ளார்.

சுன்னாகம் சூறாவத்தையைச் சேர்ந்த ம.மங்களேஸ்வரன் (வயது 26) என்ற மாணவனே மரணமடைந்தவராவார்.

(02ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பிக்கு எதிராக நேற்று யாழ். நகரில் மறியல் போராட்டம்

### வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் தமிழ்த்தேசியம் ஆகியவற்றுக்கு எதிராகப் பேரினவாதச் செயற்பாடுகளைக் கொண்டுள்ள ஜே.வி.பி.யைக் கண்டித்து நேற்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். பஸ் நிலையப்பகுதியில் மறியல் போராட்டம் இடம்பெற்றது.

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப்

இதனால் அப்பகுதியூடான போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பெருமளவு வாகனங்கள் மறிப்புப் போடப்பட்ட இடத்திற்கு முன்னும் பின்னும் காத்து நின்றன.

அவ் வழியூடாக வந்த இராணுவத்தினரின் வாகனங்களும் இம் மறிப்புக்குத் தப்பவில்லை.

(02ம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி தொழிற் கல்வி நிறுவனங்களின் (கணனிப் பயிற்சி

## சயனைற் அருந்தி தற்கொலை

(புதுடில்லி)

இந்தியாவின் தர்மபுரி மாவட்டத்

### உலக கால்பந்துப் போட்டி
## அரையிறுதிப் போட்டியில் தென்கொரியா அவு

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். பஸ் நிலையப்பகுதியில் மறியல் போராட்டம் இடம்பெற்றது.

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தினால் யாழ் ஆஸ்பத்திரி வீதியூடான போக்குவரத்துக்கள் ஒரு மணி நேரம் தடைப்பட்டது.

மேற்படி கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள இணைந்து யாழ். பஸ் நிலையம் முன பாகவுள்ள ஆஸ்பத்திரி வீதிக்கு குறுக்காக நண்பகல் 12.30 மணி முதல் 1.30 மணி வரை கைகோர்த்து நின்றனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி தொழிற் கல்வி நிறுவனங்களின் (கணனிப் பயிற்சி நிலையங்கள்) இயக்குநர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4மணிக்கு கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியம் அனைத்து இயக்குநர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளது. (வ)

## தற்கொலை

(புதுடில்லி)

இந்தியாவின் தர்மபுரி மாவட்டத்தில் பொலிஸாரிடமிருந்து தப்பிக்க முயன்ற இளைஞர் ஒருவர் இயலாது போகவே சயனைற் அருந்தித் தற்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தர்மபுரி மலைப்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்ட பொலிஸார் பாலக்கோடு அருகே கார் ஒன்று வேகமாகச் சென்றதை அடுத்து

(02ம் பக்கம் பார்க்க)

## அரையிறுதிப் போட்டியில் தென்கொரியா அவுட்

(சியோல்)

உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் விளையாடிய ஜேர்மன அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை பெற்றுள்ளது.

நேற்றுத் தென்கொரிய தலைநகரம் சியோலில் நடைபெற்ற, முதல் அரையிறுதிப் போட்டியில் மூன்று முறை உலகக் கிண்ண உதைபந்தாட்ட சம்பியனான ஜேர்மன் தென்கொரியாவை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு தெரிவானது.

ஆட்டத்தில் 75வது நிமிடத்தில்

(02ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து நாளை மாபெரும் மக்கள் பேரணி

## ஊர்காவற்றுறையில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

**வேலணையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவக ஆசியல் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் அரசியல் பிரமுகர் தயாளன் ஆகிய இருவரும் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சமாதானத்திற்கான மாபெரும் கண்டனப் பேரணி நாளை நடைபெறவுள்ளது.**

யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக்கண்டனப் பேரணி முற்பகல் 10 மணிக்கு யாழ் துரையப்பா ஸ்ரேடியத்தில் இருந்து ஆரம்பமாகி அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியூடாகச் சென்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியைச் சென்றடையவுள்ளது.

தீவகம் நோக்கிச் செல்லவுள்ள இப் பேரணிக்கு யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள் மற்றும் யாழ் மாவட்ட மாணவர் ஒன்றியம் ஆகிய அமைப்புக்கள் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளன.

(02ம் பக்கம் பார்க்க)

## கண்டனப் பேரணிக்கு கூட்டமைப்பு ஆதரவு

வேலணையில் விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் தாகப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளை நடைபெறவுள்ள சமாதானத்திற்கான கண்டனப் பேரணிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நிராயுத பாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்ட விடுதலைப்புலிப் போராளிகள் தாக்கப்பட்டமைக்கு கூட்டமைப்பினர் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நாளை பேரணி முடிவில் ஊர்காவற்றுறையில் நடைபெறவுள்ள கண்டனக் கூட்டத்தில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்து கொள்வார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வெளிவருகிறது AUGUST 1ல்

திரு. ச. முத்துலிங்கம் எழுதிய கல்வி உளவியல் I, II (திருத்திய புதிய பதிப்பு) எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தொடர்புகட்கு, ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
(சி- 5112)

## தமிழ் தினப் போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த் தினப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது

மேற்படி போட்டி நாளை நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைத்திருப்பதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.
(உ- 19)

## இராசி பலன்

26- 06- 2002
(ஆனி 12, புதன்)
துதியை பி. இ. 3. 20வரை
பூராடம் மு. ப. 11 44வரை
இராகு காலம் 11. 55- 1. 25
நல்ல நேரம் 4. 25- 5. 55

**மேடம்**
குடும்ப மகிழ்ச்சி, வாக்கு மேன்மை, சுவாரஸ்யம், உடல் வியாதி.

**இடபம்**
கற்பனை மிகுதி, தொழில் முயற்சி, புத்திரரால்மகிழ்ச்சி, ரோகபயம்.

**மிதுனம்**
மாதர் நட்பு, சுபநிகழ்வு, போசன சுகம், நல்ல செய்தி.

**கடகம்**
தாய்வழி உறவு, பணவரவு, தொழில் கஷ்டம், வீண் பிரச்சினை.

**சிங்கம்**
முயற்சி தாமதம், சுகக் குறைவு, கூட்டுமுயற்சி, மனக் கிலேசம்.

**கன்னி**
நண்பர்கள் சந்திப்பு, உடல் நலம், தெய்வ சிந்தை, மன மகிழ்ச்சி.

**துலாம்**
விரும்பாத உறவு, சந்தோசமான நிகழ்வு, பண விரயம், வீண் பிரச்சினை.

**விருச்சிகம்**
உடல்வியாதி, ஜனவசியம், காரிய அலைச்சல், உஷ்ணம்.

**தனுசு**
கற்பனை மிகுதி, மாதர் சிந்தை, வாக்கு மேன்மை, புதிய திட்டமிடல்.

**மகரம்**
அபூர்வ சந்திப்பு, அந்நியர் உதவி, மனக்கட்டுப்பாடு, சுகக்குறைவு.

**கும்பம்**
அதிக பிரயாசை, காரிய வெற்றி, சத்துரு ஜெயம், ஆலய தரிசனம்.

**மீனம்**
தனலாபம், வீண்செலவு, திடீர் பயணம், நித்திரைக் குழப்பம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# சமாதான விரோதிகளுக்கு எதிராக
# மக்கள் பேரணி இடம்பெறுகிறது!

## வெகுஜன ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்) நாளை நடைபெறவுள்ள கண்டனப் பேரணி குறித்து வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு,

காலம் காலமாக சிங்கள பௌத்தபேரினவாத ஆட்சியாளர்களால் திட்டமிட்டு உருவாக்கி தீவிரப்படுத்தப்பட்ட இந்த கொடிய இனவாதப் போரால், தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களும் அழிவுகளும் அவமானங்களும் கொஞ்சநெஞ்சமல்ல.

சிங்கள மக்கள் மத்தியில் பௌத்த இனவாத வெறியை ஊட்டி தமிழ்மக்களின் உரிமைகளையும், உயிர்களையும், உடைமைகளையும் போட்டி போட்டுப்பறித்து அதன்மூலம் ஆட்சி பீடம் ஏறினார்கள் அன்றைய சிங்கள அரசியல் வாதிகள்.

இந்த திட்டமிட்ட தமிழின அழிப்புக்கெதிராக அன்றைய எமதுஅரசியல் தலைவர்களும் தமிழ் மக்களும் அறவழியில் நின்று உரிமைக்குரல் எழுப்பினர். அந்த நீதியின் குரல்கள் அரசின் பொலிஸ் இராணுவ இயந்திரத்தால் நெரிக்கப்பட்டன. அன்பு வழியில் நின்று வாழ்வுரிமை கேட்ட தமிழ்மக்களுக்கு
7ஆம் பக்கம் பார்க்க)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு
## 2002 / 2003

2002 / 2003 கல்வியாண்டில் கலை / விஞ்ஞானம் / மருத்துவம் / முகாமைத்துவம் / வர்த்தகம் / விவசாய கற்கை நெறியை யாழ். பல்கலைக்கழகத்தில் பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக்கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவரவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கல்வியைத் தொடரவிரும்பும் மாணவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நேரில் வந்து தங்கள் பதிவை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவு செய்யப்படாதோரின் பெயர்ப் பட்டியல் 10-07-2002 ற்கு முன்னதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பவேண்டியுள்ளதால் தங்களது பதிவினை 05-07-2002 ற்கு முன்னதாக மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| பீடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| கலை | 1.7.2002 & 2.7.2002 | 9.00-12.30 & 1.30-3.30 |
| மருத்துவம் & விவசாயவிஞ்ஞானம் | 3.7.2002 | 9.00-12.30 & 1.30-3.30 |
| முகாமைத்துவம் & வர்த்தகம் | 4.7.2002 | 9.00-12.30 & 1.30-3.30 |
| பௌதீகவிஞ்ஞானம் & உயிரியல் விஞ்ஞானம் | 5.7.2002 | 9.00-12.30 & 1.30-3.30 |

### சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்.
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்)
3. பாடசாலை விடுகைப்பத்திரம் (மூலப்பிரதியும், போட்டோப் பிரதியும்)
4. நிழற்படப் பிரதி (அளவு 2''x2½'') கறுப்பு வெள்ளை - 08
5. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
6. தேசிய அடையாள அட்டை போட்டோப் பிரதி
7. க. பொ. த. (உயர்தரம்) பெறுபேறும் அதன் ''Z'' ஸ்கோர்
8. கட்டணங்கள்
   பதிவுக் கட்டணம் ரூபா 150.00
   ஆய்வுக்கட்டணம் ரூபா 300.00
   (மருத்துவம் / விஞ்ஞானம் / விவசாயம் / கலைப்பிரிவில் புவியியலை ஒரு பாடமாக எடுப்பவர்களுக்கு)
   வைத்தியக் கட்டணம் ரூபா 100.00
   கைநூல் ரூபா 65.00
   மாணவர் வழிகாட்டி நூல் 10.00

### முக்கிய குறிப்பு:-
**வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டும்;**

நேரில் வந்து பதிவுசெய்ய முடியாதோர் பதிவு விண்ணப்பப்படிவத்தை உதவிப்பதிவாளர்/ பரீட்சைகளும் அனுமதிகளும், யாழ். பல்கலைக்கழகம்/ உதவிப் பதிவாளர்/ வவுனியா வளாகம், கொழும்பு ஸ்ரோஸ் ஈ ஜீ-4 சென்ரல் றோட், கொழும்பு-12 இல் பெற்று விண்ணப்பப்படிவத்தில் இடப்பட்ட கையொப்பத்தைத் தாங்கள் தற்போது வதியும் இடத்திலுள்ள சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தி, கட்டணத்தைக் காசுக் கட்டளையாக நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியில் பெற்று பதிவுத் தபாலில் கேட்கப்பட்ட ஆவணங்களுடன் 05-07-2002 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக உதவிப்பதிவாளர்/ பரீட்சைகளும் அனுமதிகளும், யாழ் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டோர் பெயர்ப்பட்டியல் அந்தந்த பீட விளம்பரப் பலகையிலும், நலச்சேவைகள் கிளை விளம்பரப்பலகையிலும் பார்வைக்கு இடப்பட்டுள்ளது.

பதிவாளர்

(கி-4524)

---

## யாழ்.பல்கலை

சிகிச்சைக்காக கொழும்பு சென்ற இவர் அங்கு வைத்தியசாலையில் மரணமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது-

இதேவேளை யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்றுகாலை 10மணிக்கு பிரஸ்தாபமாணவனின் பூதவுடல் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

இவ் அஞ்சலிநிகழ்வில் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர்ஒன்றியம் அழைப்புவிடுத்துள்ளது(இ)

## ஜே. வி. பிக்கு

இதேவேளை, மறியல் போராட்டத்தைத் தடுக்கமுற்பட்ட பொலிஸாருக்கு போராட்ட நோக்கங்கள் குறித்து விளக்கப்பட்டதைத் தொடர்ந்து விலகிச் சென்றனர்.

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் க. தேவதாசன் தலைமையில்இடம்பெற்ற இந்தமறியல் போராட்டத்தில் பெருமளவு பொதுமக்களும்கலந்துகொண்டனர்.

அத்துடன் பொதுஅமைப்புகள் யாவும் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.
(உ- 6, 2)

## அரைஇறுதி

ஜேர்மனி வீரர் மைக்கல்பலக் கோலைப்போட்டு ஜேர்மன் அணிவெற்றிபெறச் செய்தார்.

நேற்றைய ஆட்டத்தில் இறுதிவரை இரு அணிகளும் பலமாக மோதியபோதிலும் ஜேர்மனி அணியின் பலமே மேலோங்கி இருந்தது.

ஆசியாவில் அரைஇறுதிப் போட்டியில் தகுதிபெற்ற முதல்அணிஎன்றபெருமையை பெற்ற தென்கொரியஅணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாதது கொரியமக்களை பெரிதும் கலக்கமடையவைத்துள்ளபோதிலும் தமதுஅணி அரைஇறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமையை எண்ணி மகிழ்வடைந்தனர்

கொரியஅணியின் ஆட்டத்தை காண்பதற்காக 65இலட்சம் மக்கள் சியோலில்கூடியமை குறிப்பிடத்தக்கது

இன்றுநடைபெறும் அரை இறுதிப் போட்டியில் பிறேசிலை எதிர்த்து துருக்கிமோதவுள்ளது (ந-5)

## சயனைற் அருந்தி

அதனை வழிமறிக்க முற்பட்ட போது அதிலிருந்த 5 பேர் தப்பி ஓடிவிட்டதாகவும் ஒருவர்ஓடமுடியாதுசயனைற் அருந்தி தற்கொலை செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ந)

## தெரிவான மாணவர்

நுண்கலைத்துறை அனுமதி மீன்பிடியியல்கற்கை, உடற்கல்வியியல்கற்கைநெறி ஆகியவற்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ் பல்கலைக் கழகம் விரைவில் மேற்கொள்ளுமென்றும் தெரிவிக்கப்படுகிறது (இ)

## மூதூரில்

ஊர்வலத்தில் வந்த இளைஞர்களுக்கும் தாக்குதல் நடத்திய இளைஞர் குழுவுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது.

சம்பவஇடத்திற்கு விரைந்து வந்த பொலிசார் கண்ணீர் புகை, மற்றும் குண்டாந்தடிப்பிரயோகம் மேற்கொண்டு ஊர்வலத்தில் வந்தவர்களைக் கலைந்து செல்லுமாறு பணித்தனர்.

இக்கைகலப்புச் சம்பவத்தின் போது மூன்று முஸ்லிம் இளைஞர்கள் காயமடைந்து மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து சம்பவம்நடைபெற்ற இடத்திற்கு இராணுவமும் விரைந்துசென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

எனினும் இராணுவமும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் பலனளிக்காதுபோக பொலிசார் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குசட்டத்தை நேற்றுநண்பகல் ஒருமணி முதல் இன்றுஅதிகாலை 6.30 மணிவரை பிறப்பித்துநிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் ஆயினும் அப்பகுதியில் பதற்றம் தணியவில்லை என்று எமது மூதூர்செய்தியாளர் அறிவித்துள்ளார்,

இதேவேளை மூதூர்நகரில் உள்ள தமிழ்மக்கள் அச்சம் காரணமாக பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்து வருவதாகவும் எல்லைக்கிராமங்களில்உள்ள முஸ்லிம்மக்களும் இடம்பெயர்ந்து வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது (வ)

## விடுதலைப்

வியாபார நிறுவன ஊழியர்கள் அரசதனியார் கூட்டுறவுநிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும்ஒன்றிணைந்து பேரணியில் கலந்துகொள்ளுமாறும் நீதிக்கானதும் நிரந்தரசமாதானத்துக்கானதுமான வழிவகைகளை கட்டிஎழுப்ப முன்வருமாறும் ஒன்றியம் அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன் பேரணியில் பங்குகொள்ள வசதியாக வடமராட்சிதென்மராட்சிமற்றும் வலிகாமம் ஆகியபகுதிகளைச் சேர்ந்த மக்களை முற்பகல்10 மணிக்குமுன்னதாக யாழ் துரையப்பா ஸ்ரேடியத்தில் ஒன்றுகூடுமாறும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளைமக்கள்போக்குவரத்துக்கு வசதியாக தனியார் சிற்றூர்தி மற்றும் பாரவூர்தி உரிமையாளர்கள் தமது வாகனங்களை சேவையில் ஈடுபடுத்துமாறும் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேரணிமுடிவில் மாபெரும் கண்டனக்கூட்டம் ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ)

# யுத்த நிறுத்தத்தை எதிர்க்கும் ஜே. வி. பியை எதிர்ப்போம்

## சமூக நன்மைக்காக மரணித்த மனிதன்

(கொழும்பு)

'சொல்லில் ஒன்று செயலில் இன்னொன்று' இது தான் இன்றைய உலகம்.

இந்த விசித்திர உலகத்தில், சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து அல்ல, இறந்து காட்டிய ஒரு நல்மனிதர் பற்றிய செய்தி இது.

'எனது சமூகத்தின் நன்மைக்காக இந்த நிமிடமே மரணிக்கவும் நான் தயாராக உள்ளேன்.

வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் பேரவையின் முக்கிய பிரமுகரான நிந்தவூர் அல்-அஷரக்மகாவித்தியால யமுன்னாள் அதிபரும்கல்விமானுமாகிய எம்.எஸ். ஹமீட், இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம் பேரவை கடந்த வியாழக்கிழமை பி.ப 3-30 மணியளவில் நடத்திய கூட்டத்தில் இவ்வாறுஉரையாற்றிக் கொண்டிருந்தார்.

என்னே ஆச்சரியம் இவ்வாறு கூறிய மறு நிமிடமே அவர் சரிந்து விழுந்து மரணமானார்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது தவிக்கும் எம்மவர்கள் இந்த மனிதரை ஒரு உதாரண புருஷராக கொள்வார்களாக!

(உ)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு

## பயிற்சிப் பட்டறை கொழும்பில் நடத்தஏற்பாடு

(மந்திகை)

யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பயிற்சிப் பட்டறை கொழும்பில் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப் பயிற்சிப் பட்டறையில் யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த பிரதேசசெயலகங்களிலிருந்து கட்டம்கட்டமாக சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளைவழங்க சமுர்த்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

பயிற்சிப்பட்டறைகளை விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொண்டு வருவதாகவும் அதிகாரிஒருவர் தெரிவித்தார். (உ-23)

## பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

(மந்திகை)

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கையினால் கடல் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சொத்துக்களின் அழிவுகளுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையில் கடல் தொழில் திணைக்களம் ஈடுபட்டுவருகிறது.

கடந்த 96 ஆம் ஆண்டுக்கு முன் ஏற்பட்ட சொத்துக்களின் விபரங்களை சேகரிக்க எமது கடல்தொழில் சங்கங்களுக்கு கடல்தொழில் திணைக்களத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கான நட்டஈட்டுப் படிவங்களும் கடல்தொழிலாளர் சங்கங்கள், சமாசங்களினால் விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

வடமராட்சி கிழக்கு கடல் தொழிலாளர்கள், வடமராட்சி வடக்கு சமாசம் வடமராட்சி கிழக்கு சமாசங்களில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-23)

வெடிப் பொருட்கள் உள்ளதாக

## சந்தேகிக்கும் இடங்களில் குடியமர வேண்டாம்

படைத்தரப்பு மீண்டும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

## மறியல் போர் முடிவில் தேவதாசன் உரை

(யாழ்ப்பாணம்)

மீண்டும் ஒரு யுத்தம் எமக்கு வேண்டாம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை எதிர்க்கும் ஜே.வி.பி போன்ற இனவாதக கட்சிகளை நாம் ஓரணியில் நின்று எதிர்ப்போம்.

ஐக்கிய சோசலிஷக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று ஜே.வி.பியை எதிர்த்து இடம்பெற்ற மறியல் போராட்ட முடிவில் இடம்பெற்றபொதுக் கூட்டத்தில் ஏற்பாட்டாளர் க.தேவதாசன் இவ்வாறுகுறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

ஜே.வி.பியின்பேரினவாதப் போக்கைக் கண்டித்து நாம் வீதிகளில் இறங்கிப் போராடுவோம் இக்கட்சியின்நோக்கங்களை நாம் தடுப்போம்.

இதன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான முயற்சிகளைப் பலப்படுத்துவோம்.

கடந்தகால யுத்தத்தினால் அழிந்து போன எமது மண்ணையும், துயரத்தில் வாடும் மக்களையும் மீட்டெடுக்க நிரந்தர அமைதியும் சமாதானமுமே எமக்கு வேண்டும் எனக் கூறினார்.

(உ-6,2)

## சனியன்று சமூகமளிக்குக

பலாலிஆசிரியர் கலாசாலையில் இருந்து இறுதியாகப் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களையும், கலாசாலையின் விரிவுரையாளர்களையும்எதிர்வரும் சனிக்கிழமை கலாசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் கு. சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார்.

(உ-19)

பலாப் பழங்கள்

## கொள்வனவு

தென்னிலங்கையில் இருந்து வரும் வர்த்தகர்கள் பெருமளவு பலாப்பழங்களையும், வாழைக்குலைகளையும் கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர்.

மூவின வர்த்தகர்களும் இம் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

(உ-79)

படைப்பாளிகளுடன்

## முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்களுக்கான முக்கிய சந்திப்பு எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புள்ளியிடலை எதிர்த்து தாக்கல் செய்த

## மனுவை மேல்முறையீட்டு நீதிமன்று நிராகரிப்பு

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டுக.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பல்கலைக்சழக மானியங்கள் ஆணைக்குழு இஸற் ஸ்கோர் (புள்ளியிடல்) முறைப்படி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்வதைதடைசெய்யுமாறு கேட்டு, மாணவர்களின் குழுவொன்று தாக்கல்செய்த மனுவை மேல்முறையீட்டுநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

எதிர்மனுதாரர்களாக பல்கலைக்கழக மானியக் குழுத்தலைவர் என். மென்டிஸ் உம் வேறு 18 பேர்களும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் 2001இல்பரீட்சைக்கு தோற்றியவர்கள் இவர்கள்தமதுமனுவில் குறிப்பிட்டதாவது.

''2000 ஆம் ஆண்டிற்குமுன் பல்கலைக்கழக அனுமதி, மொத்தப்புள்ளி அடிப்படையிலேயே வழங்கப்பட்டது.

இதனை சுற்றறிக்கை ஒன்றின் மூலமும், நூலொன்றின் மூலமும் பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழு முன்னர் தெரியப்படுத்தியிருந்தது.

ஆனால், பின்னர் 2001 ஆம் ஆண்டிலிருந்து இஸற்ஸ்கோர்முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதனால் பல்கலைக்கழக மானியக்குழு தமது சட்டப்படியான கடமையிலிருந்து தவறிவிட்டது என்றும் பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டபோது இது பற்றி மாணவர்களுக்கு தெரிவிக்கத்தவறிவிட்டதுஎன்றும்' இஸற் புள்ளிமுறை உலகில் எந்தவொரு நாட்டிலும்நடைமுறையிலில்லை என்றும்தமது மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் காமினி அமரதுங்கவும் கே. சிறிபவன்அவர்களும் மேற்படி மனுவைநிராகரித்திருந்தனர். (உ)

மானிப்பாயில் இடம் பெற்ற

## மருத்துவ முகாமில் சுமார் 2ஆயிரம் பேர்பயன்

(சுதுமலை)

அண்மையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் றோட்டரிக் கழகங்கள் இணைந்து நடத்திய மருத்துவ முகாமில் சுமார்2ஆயிரம்பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் சாவல்கட்டுப் பகுதியில்இனம் காணப்பட்ட 15 இளம்விதவைகளுக்கு விசேட சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு அத்தியாவசியமானபொருட்களும் அன்பளிப்பாகவழங்கப் பட்டன.

மேற்படி மருத்துவ முகாமில் 25ற்கும் மேற்பட்டவைத்தியர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-252)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு

எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை பி. ப 3.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சிறப்பு நிகழ்ச்சியாக வன்னியிலிருந்து சமாதான கலைப் பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள கலைஞர்களின் சிறந்த நடிப்பிலும், புதுவை அன்பனின் நெறியாள்கையிலும் உருவான ''கரை தேடும் ஓடங்கள்'' என்னும் நாடகத்தின் விமர்சன அரங்கும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குக் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

(த)

# குடியமர வேண்டாம்

## படைத்தரப்பு மீண்டும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி, கண்ணிவெடி அபாயம் உள்ளதாக சந்தேகிக்கப்படும்இடங்களில்மக்களைக் குடியமர வேண்டாம் என படைத்தரப்பு மீண்டும்பொது மக்களைக் கேட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாம் ஊடகத் துறையைச் சேர்ந்த ஏ.எச். பிஜே த சில்வா இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த மாதத்தில் நிலக் கண்ணி வெடிகளினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு படையினருக்கு தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக முன்னரும் பாதுகாப்பற்றபகுதிகளுக்கு உட்பிரவேசிக்க வேண்டாம் என பாதுகாப்பு படையினர் அறிவித்துள்ள போதிலும், அந்த அறிவித்தல்களைக் கடைபிடிக்காத மக்களே இவ்வாறு மிதி வெடிகளின் அனர்த்தங்களில் சிக்கியுள்ளனர்.

எனவேதமக்குசந்தேகமான பகுதிகளுக்கு உட்பிரவேசிக்கும் முனனர் அப்பகுதியில் வசிக்கும் அயலவர்களிடம் அல்லது அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு சென்று கேட்டு அறிந்து கொள்ளுமாறு பாதுகாப்பு படையினர்பொது மக்களை கேட்டு கொள்கின்றனர் என்றுள்ளது. (உ)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்

(தென்மராட்சி)

2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் வன்னிபெரு நிலப் பரப்புக்கு இடம் பெயர்ந்து தற்போது தென்மராட்சியில் மீளக்குடியமர வந்துள்ளகுடும்பங்களுக்கு சுகாதாரசேவைகள் திணைக்களம் நுளம்பு வலைகளை வழங்கிவருகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு இவை இலசவமாகவும் வறுமைக் கோட்டுக்கு மேலுள்ள குடும்பங்களுக்கு ஒரு வலை தலா 500ரூபா வீதமும் வழங்கப்படுகின்றன.

அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களின் சிபார்சின் பேரிலேயே இவை வழங்கப்பட்டு வருகின்றன. (உ-77)

# இடமாற்றச் சபை கலைப்பு ஆசிரியர்கள் போர்க் கொடி

(கொழும்பு)

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக செயற்பட்டு வந்த தேசிய ஆசிரியர் இடமாற்றச்சபையைக் கலைத்து விட்டு அப்பொறுப்பை கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கும் முயற்சிகளுக்கு ஆசிரியர்கள் தரப்பில்எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு, ஆசிரியர்களையும் அதிபர்களையும் இடமாற்றுவது சம்பந்தமான தீர்மானங்களைக் கடந்த காலங்களில் ஆசிரியர் இடமாற்றுச் சபையே மேற்கொண்டு வந்தது.

இப் பொறுப்பை கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பது தாபனக் கோவையை மீறுவதாக அமைகிறது என ஆசிரிய வட்டாரங்கள் அதிருப் வெளியிட்டுள்ளன.

கல்விச் சேவைகள் ஆணைக் குழுவிடம் இப் பொறுப்பை ஒப்படைத்தால் நியாயமான முறையில் ஆசிரிய இடமாற்றங்களை பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் அந் நியமனங்கள் அரசியல் மயமாகிவிடும் எனவும் ஆசிரிய சங்கங்களின் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(உ-8)

# பிரதான கட்சிகள் மாறிமாறிக் குற்றச்சாட்டு மக்கள் பெரும்பாடு

(கொழும்பு)

வாழ்க்கைச்செலவுநாளுக்கு நாள் அசுர வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கும்இவ் வேளையில் ஆளும் கட்சியான ஐ.தே.முன்னணியும்பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ. முன்னணியும் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பாகஒன்றையொன்று குற்றஞ் சாட்டிக்கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி குமாரதுங்க சர்வதேச நாணய நிதியத்துடன் இரகசியமாக செய்து கொண்ட ஒப்பந்தமே இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு காரணம் என்று ஐ.தே.க. வின் ஊடகப் பேச்சாளர் சஜந்த கருணாதிலக நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றைய வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு நெருக்கடிக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி பொறுப்பேற்க முடியாது.


அனைத்தும் ஐக்கிய தேசிய முன்னணியால் ஏற்பட்டவையே என்று கடந்த வெள்ளிக்கிழமை பொ.ஐ.மு. ஊடகப்பேச்சாளர்சாத் அமுனுகம தெரிவித்ததையடுத்தே இவ்வறிக்கை ஐ.தே.முன்னணியால் விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 13

## பகுதி I

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்


**ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் உண்ட காலை உணவு விபரம் கீழே தரப்படுகின்றது. விபரத்தை நன்கு அவதானித்துக் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**





(01) காலையில் பிட்டு உண்டவர் எத்தனை பேர்?
(02) பாண் ஜாமுடன் உண்டோர் எத்தனை பேர்?
(03) தோசை உண்ட பெண்களின் பெயரை எழுதுக?
(04) கூடுதலானோர் உண்ட உணவு எது?
(05) எத்தனை பெண்கள் உணவு உண்டனர்?

**கோலத்தை அவதானித்து இடைவெளி நிரப்புக.**


06)





07)




(08)




(09) A சந்தைக்குச் செல்ல எத்தனை K.m செல்ல வேண்டும்?
(10) D சந்தைக்குச் சென்று A யைச் சந்திக்க எத்தனை K.m செல்ல வேண்டும்?
(11) C யிலிருந்து F க்குச் செல்வதா D யிலிருந்து A க்குச் செல்வதா குறைவான தூரம்?
(12) A யிலிருந்து B ஊடாக F எத்தனை K.m?
(13) பாடசாலையிலிருந்து வைத்தியசாலை சென்றுவர ஆட்டோக் கூலியாக 340ரூபா அறவிடப்படுகின்றது. எனின் ஒரு K.m செல்வதற்கு எவ்வளவு பணம் அறவிடப் படுகின்றது?

**கீழேயுள்ள கதையை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு நாள் முல்லாவின் குதிரை திருட்டுப் போய் விட்டது. அயலவர்கள் நண்பர்கள் எல்லோரும் முல்லாவின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்கள் முல்லாவுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறாமல் அவரைக் குற்றம் சாட்டினார். நீங்கள் லயத்தை ஒழுங்காகப் பூட்டவில்லை என்றனர் சிலர். கள்வர்கள் திருட வந்த போது நீங்கள் நித்திரை கொண்டிருக்கிறீர்கள் என்றனர் சிலர். மிருகத்தை நீங்கள் ஒழுங்காகக் கட்டவில்லை என்றனர் சிலர். பொறுமையிழந்த முல்லா அவர்களைப் பார்த்து ''அப்போ திருடனில் குற்றமில்லை என்று சொல்கிறீர்கள்'' என்றார். வந்தவர்கள் அசடு வழியச் சென்றனர்.

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

(14) திருடப்பட்ட மிருகம் ( எருது, ஒட்டகம், குதிரை)
(15) லயத்தில் கட்டுவது ( குதிரை, எருமை, மாடு)
(16) அசடு வழிதல் என்பது ( அவமானம், மகிழ்ச்சி, கோபம்)

**விடை தருக.**

அயலவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் இரண்டு தருக?
(17)..........................................................................
(18)..........................................................................

(19) பழ மொழி முடிக்குக.
ஐந்து பணத்துக்கு குதிரையும் வேணும் ..............................
(20) குதிரையில் பெண் வடவை ஆண் ......................

**கீழே ஒரு நிகழ்ச்சி நிரல் தரப்பட்டுள்ளது. அதை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

- இரவு 7.30 மணிக்கு நாடகம் ஒளிபரப்பாகும்.
- இரவு 11.00 மணிக்கு சிறுவர் நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.
- மாலை 5.30 மணிக்கு சினிமாப் பாடல் ஒலிபரப்பாகும்.
- காலை 5.30 மணிக்கு பக்திப் பாடல் ஒளிபரப்பாகும்.
- இரவு 10.00 மணிக்கு வலைப் பின்னலில் ரைற்றானிக் படம் பார்ப்போம் என்று அப்பா சொன்னார்.

(21) இந் நிகழ்ச்சி நிரல்
வானொலி தொலைக்காட்சி / வானொலி / தொலைக்காட்சி
(22) அவர் வேலையால் வரும் போது சினிமாப் பாடல் ஒலிபரப்பானது. அவர் வந்த நேரம்.
( காலை 5.30, மாலை 5.30, மாலை 4.00 மணி )
(23) இரவு 7.30 மணிக்கு நாம் நாடகம் கேட்க நாம் தயாரானோம் இக் கூற்று
(பிழையானது, சரியானது, கூற முடியாது )
(24) இரவு 11.00 மணிக்கு சிறுவர் நிகழ்ச்சி நடை பெற்றது.
(வானொலியில், தொலைக்காட்சியில், இன்ரநெற்றில்) ஆகும்.
(25) ரைற்றானிக் படம் பார்ப்பது.
(இன்ர நெற்றில், தொலைக்காட்சியில், டெக்கில்)
(26) கண்ணன் 27 கிலோ நிறையுடையவன். அவனது அப்பா கண்ணனிலும் 28 கிலோ நிறை கூடியவர். அவனது அம்மா அப்பாவிலும் 8கிலோ நிறை குறைந்தவர். அம்மாவின் நிறை என்ன?

**நிசாலிடம் உள்ள மாபிள்களிலும் மூன்றில் ஒரு பங்கு காதரிடம் உண்டு. அன்வரிடம் காதரை விட 7மாபிள்கள் கூடவாக உண்டு. முகமட்டிடம் அன்வரை விட 5மாபிள்கள் குறைவாக உண்டு. நிசாரிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை 24.**

(27) அன்வரிடம் உள்ள மாபிள்கள் எத்தனை?
(28) முகமட்டிடம் உள்ள மாபிள்கள் எத்தனை?
(29) எல்லோரிடமும் உள்ள மாபிள்கள் எத்தனை?

(30) **பிழையான வாக்கியங்களின் இலக்கங்களுக்கு அதிலே X என அடையாளம் இடுக. முதலாவது வாக்கியம் சரியானதாகும்.**

(1) அன்று வைகாசி விசாகப் பெருநாள்
i கடற்கரையில் நின்றேன். ☐
ii இளம் பிறையாகச் சந்திரன் தெரிந்தான். ☐
iii பெரிய கப்பல் கடற்கரையில் நின்றது. ☐
iv கடற்கரை பகல் போல் இருந்தது. ☐
v தொழிலாளர் பொருட்களை இறக்கினர். ☐
vi சிறுவர்கள் விளையாடினர். ☐
vii நட்சத்திரங்கள் மிகவும் பிரகாசமாக இருந்தன. ☐
viii அன்று சந்திரன் தோன்றவில்லை. ☐

**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

காற்று நன்றாய் அடிக்குது
காகம் மேலே பறக்குது
ஆற்றலோடு அலைகளும்
அடித்தடித்து அழைக்குது

(35) இப்பாடல் இடம் பெறும் இடம் எது?
(36) அலைகள் என்ன செய்கிறது?
(37) இப்பாடலில் வரும் பறவையை இப்படியும் அழைப்பர்............
(38) இப்பறவை எதற்கு உதாரணமாகும்?.
(39) காகத்தைப் போன்று தந்திரமான மிருகம் .................
(40) காகத்திற்கு எத்தனை கண்மணிகள் ...................

**குறிப்பு:–**
**அன்பு மாணவச் செல்வங்களே! விடைகளை வேறு தாளில் தெளிவாக எழுதி 02.07.2002 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.**
*ஆசிரியர்*

**கல்விப் பகுதி**
**வினாத்தாள் 13**
**"வலம்புரி",**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

மாணவர் முழுப்பெயர் :- ..........................................
சொந்த முகவரி :- ..........................................
கற்கும் பாடசாலை :- ..........................................
இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாள்களுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

1) 1
2) 2
3) 3
4) 1
5) சேவல் கூவும்.
6) காகம் கரையும்.
7) சூரியன்.
8) ஏவல் புரிய.
9) கொக்கரிக்கும்.
10) மாலை.
11) சங்கம்+தமிழ்.
12) விளக்கு+ ஏற்றி.
13) தேநீர்.
14) பன்னிரெண்டு.
15) களஞ்சியம்.
16) துள்ளி.
17-20 பொருத்தமானது.
21) 15
22) 800m
23) 2 சுருள்.
24) 4450.00
25) 6 1/4kg
26) 406.25
27) 80 லீற்றர்.
28) 10 தடவை.
29) 1600ச.செ.மீ.
30) அறியாமை.
31) படையும் நடுங்கும்.
32) ஒட்சிசன்
33) 24
34) 105
35) 50
36) 53
37) 363
38) LXVII
39) 16kg 875g
40) 28.5 l
41) Farmer
42) Village.
43) Transport.
44) Rainny day.
45) காலை உணவு.
46) தோள்.
47) புறா.
48) நெல்.
49) S
50) M
51) S
52) S
53) S
54) M
55) S
56) S
57) M
58) மணிச்சட்டி.
59) கம்பிச் சுருள்.
60) ஆளி.
61) 1
62) 2
63-64 பொருத்தமானது.
65) பீற்றூட், கரட்
66-70 பொருத்தமானது.
71) சதுரமுகி.
72) 6
73) 12
74) 8
75-80. பொருத்தமான வசனங்கள்.

# இன்று ஒரு தகவல்

## உண்மையும் தர்மமும்

எப்போதும் உண்மையே பேசவேண்டும். அதுதான் நல்லது என்று ஒருவரிடம் சொன்னேன். உடனே அவர் என்னுடன் சண்டைக்கு வந்து விட்டார். 'சார்! உங்கள் உபதேசங்களை ஏமாந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்களிடம் சொல்லுங்கள். எனக்கு வேண்டாம். ஆளை விடுங்கள்' என்று சொல்லிவிட்டு ஓடப்பார்த்தார் நான் விடவில்லை. 'என்ன விஷயம் சொல்லிவிட்டு அதன்பின் ஓடுங்கள்' என்றேன். அவர், சார்! போனவாரம் சென்ட்ரல் ஸ்டேஷனில் ஒரு பெரிய சூட்கேஸுடன் நின்று கொண்டிருந்தேன். பக்கத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் இந்த சூட்கேஸை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் அதோ அங்கே போய் தண்ணீர் குடித்துவிட்டு வந்து விடுகின்றேன் என்றேன். 'சரி' என்றார்.

நான் போய்த் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பிவந்து பார்க்கிறேன். அந்த ஆளையும் காணவில்லை, எனது சூட்கேஸையும் காணவில்லை. அடித்துக்கொண்டு போய் விட்டான் சார்!' என்றார். 'ஐயோ பாவம்' என்றேன். 'உண்மையைப் பேசவேண்டுமென்று சொல்கிறீர்களே அதனால் வந்த கஷ்டம்தான் சார் அது' என்றார். எப்படி என்று கேட்டேன். 'பெட்டியைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று நான் சொன்னபோதே அந்த ஆள் பெட்டிக்குள் என்ன இருக்கிறது' என்று கேட்டார். நான் உண்மையைச் சொல்லிவிட்டேன் '15000 ரூபா பணம் இருக்கிறதென்று. இப்போது அவ்வளவும் போய்விட்டது சார்!' என்றுசொல்லிவிட்டுப் புலம்ப ஆரம்பித்து விட்டார்.

சத்தியம் பேசுவது உத்தமமான காரியந்தான். அதில் ஒன்றும் சந்தேகம் வரவேண்டியதில்லை. ஆனால் தர்மம் என்பது மிகவும் சூட்சுமமாக உள்ளது. எது தர்மம்- எது அதர்மம் என்பது நமக்குப் புரிவதில்லை. அதனால்தான், சத்தியம்பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு சங்கடத்தில் மாட்டிக்கொள்கிறோம். ''கௌசிகர் என்ற முனிவர் ஒருவர் இருந்தார். உடனே'' உமக்கு மிகுந்த பழக்கமா அவர்என்றுகேட்காதீர்கள், புராண காலத்து முனிவர் அவர்.

பொய்சொல்லாதவர்என்று அவர் பெயர் வாங்கியிருந்தார். அவர்காட்டில் இருந்தார். அப்போது ஒருநாள் சிலர் பயந்துகொண்டுஅந்தப் பக்கமாக ஓடிவந்தார்கள். என்ன விஷயம் என்று கேட்டார். திருடர்கள் சிலர் எங்களைத் துரத்திகொண்டு வருகிறார்கள். அதுதான் இந்தப் பக்கமாக ஓடி வந்தோம்.'' என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் புதர் மறைவில் ஒளித்துக் கொண்டார்கள், அவர்கள் ஒளித்துக்கொண்டிருக்கிற இடம் முனிவருக்குத் தெரியும். கொஞ்சநேரத்தில் அந்தத்திருடர்களும் அந்தப் பக்கமாக ஓடி வந்தார்கள், முனிவரைப்பார்த்தார்கள். அவர் பொய் பேசாதவர் என்பது அவர்களுக்குத் தெரியும். ''சுவாமி! நீங்கள் பொய்யே சொல்லாதவர்அதனால், எங்களுக்குஒருஉண்மையை நீங்கள் சொல்லவேண்டும். எங்களுக்குப் பயந்துகொண்டு இந்தப் பக்கமாகச் சிலர் ஓடிவந்தார்களே... அவர்கள் எங்கே ஒளித்திருக்கிறார்கள்'' என்று கேட்டார்கள். முனிவர்தான பொய்சொல்லமாட்டாரே! உடனே அவர்கள் ஒளித்துக் கொண்டிருந்த இடத்தைக் காட்டிக் கொடுத்து விட்டார். திருடர்கள்நேராகப் போனார்கள். அவர்களைக் கொன்றுவிட்டு, அவர்களிடம் இருந்கவற்றை யெல்லாம்எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். உண்மைபேசின அந்த முனிவர் சொர்க்கத்துக்குப்போகவில்லையாம் நரகத்துக்குப் போய்விட்டாராம். இந்தக் கதையைச் ஸ்ரீகிருஷ்ணர் சொன்னார்.

அதைக்கேட்ட அருச்சுனனுக்கு அதுஆச்சரியமாக இருக்கிறது. ''இதுஎன்ன வேடிக்கையாக இருக்கிறது. சத்தியம் சொன்னதற்கு நரகமா? என்று கேட்கிறார் அதற்குக் கிருஷ்ணர் பதில் சொல்கிறார்.

உண்மை பேசுவதனால், ஏற்படுகிற ஒரு நன்மையை பொய் பேசுவது கொடுக்குமென்றால்... அந்தச் சமயத்தில் பொய்தான் உண்மை. அதே மாதிரி பொய் பேசுவதனால் ஏற்படுகிற ஒரு தீமையை உண்மை பேசுவது கொடுக்குமென்றால் அப்போது அந்த உண்மைதான் பொய், எந்தத் தர்மமாக இருந்தாலும் சரி, 'அதனால் இன்னொருவருக்கு ஹிம்சை விளையுமென்றால் அது அதர்மம், சத்தியம் பேசுவதனால் ஒரு தீமை விளையும் என்று வைத்துக் கொள்ளுங்கள், அந்தச் சமயத்தில் மௌனமாக இருந்து விடுவதுதான், நல்லது, அப்படி இருக்க முடியவில்லை என்றால் பொய் சொல்லலாம், அதனால் பாவமில்லை.

விவாக சமயங்களில் மனைவியோடு தனித்து இருக்கிற போது- எவர் உயிருக்காவது ஆபத்து ஏற்படுகிற சமயங்களில்- வேடிக்கையாகப் பேசுகிறசமயங்களில்- இது மாதிரியான நேரங்களில் பொய் சொன்னால் பாவமில்லையென்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் சில வீடுகளில் பாருங்கள், வீட்டுக்கார அம்மா ஞாபக மறதியாக காப்பியில் சர்க்கரைக்குப் பதிலாக உப்பைப் போட்டுக் கொண்டு வந்து வைத்துவிட்டு காப்பி எப்படி என்று அபிப்பிராயம் வேறு கேட்பார்கள், இவரும் மிகவும் சாமர்த்தியமாக, ''இந்தக் காப்பிக்கு ஈடு இணை இந்த உலகத்திலேயே கிடைக்காது என்று விடுவார், அது மட்டுமில்லை. அதை ரசித்தும் சாப்பிடுவார். உண்மையைச் சொல்லி, ஒரு சத்தியத்தைப் பேசி ஒரு ஹிம்சையை எதற்கு விலை கொடுத்து வாங்க வேண்டும் என்பதற்காக அவர் இதைச் செய்கிறார். எது தர்மம், எது அதர்மம் என்கிற விஷயத்தில் இவர் பெரியகில்லாடி, அருச்சுனனுக்கு கிருஷ்ணர் பாடம் சொன்னார். இவர் அவருக்கே பாடம் சொல்லிக்கொடுப்பார் போலிருக்கிறதே,

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# சேதமடைந்த வீடுகளைத் திருத்த தலா 50 ஆயிரம் வழங்கப்பட வேண்டும்

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர்

(தென்மராட்சி)

அரசாங்க அதிகாரிகளினால் சாதிக்க முடியாதவற்றினை பொதுமக்கள் தமது பலத்தின் மூலம் சுலபமாகச் சாதிக்க முடியும். இதனால் மக்கள்யாவரும்ஒற்றுமையாக இருந்து செயற்படவேண்டிய அவசியம் உள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போது இவ்வாறுதெரிவித்தார்.

திணைக்களத் தலைவர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்.

புனர்வாழ்வு, புனரமைப்பு விடயத்தில் தென்மராட்சியில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் பெரிதாக இருக்கின்றன. பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் தேவைகளை உடனுக்குடன் உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறலாம். ஆனால் அவற்றுக்கான தீர்வுகளை உடனடியாகச் செய்வது சாத்தியமல்ல:

இங்கு சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு தலா 50 ஆயிரமாவது வழங்கப்பட வேண்டும்.

ஆனால், யார் வழங்குவது என்பதுதான்எம் முன்னுள்ள கேள்வி. தென்மராட்சியில் அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவும் தமது செயற்பாடுகளைச் செய்ய இதுவரை முன்வரவில்லை.

இங்கு பல நிறுவனங்கள் பெயருக்காகஇருந்துகொண்டு பொதுமக்களின் பிரச்சினைகள் பற்றி எவ்வித அக்கறையுமே எடுக்காது இருக்கின்றன. பொது நிறுவனங்கள் பிரதேச செயலரின் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அத்துடன், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்குகொள்பவர்கள் தமது நேரத்தையும், மற்றவர்களுடைய நேரத்தையும் மதிக்க வேண்டும். ஒரே பிரச்சினைகளை மட்டும் தொடர்ந்து பேசிக் கொள்வது வளர்ச்சிக்கான சரியான போக்கு அல்ல என்றும் குறிப்பிட்டார்.

(உ-77)

# மாணவர்களுக்கு அச்சகத் துறைப் பயிற்சி

### நாடளாவிய ரீதியில் புதிய திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அச்சகத்துறையில் பயிற்சியளிப் பதற்கான புதிய திட்டமொன்று நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

அச்சுக் கைத்தொழிற்றுறையின் எதிர்கால ஆளணித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது குறித்து இலங்கை அச்சகர்கள் சங்கம் கல்வியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளதாகவும் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் அச்சகத் துறையினருக்கு பற்றாக்குறை நிலவுவதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-8)

# டெங்குத் தாக்கம் அதிகரிப்பு

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு டெங்குக் காய்ச்சலின் தாக்கம் 40 வீதத்தால் அதிகாரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 25 பேர் டெங்குக் காய்ச்சலினால் இறந்துள்ளதாகவும் 4 ஆயிரம் பேர் இந்த நோய்க்கு ஆளாகியிருப்பதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(த)

# இராணுவக் கட்டமைப்பில் வெகு விரைவில் மாற்றம்

### திலக் மாரப்பன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தை மேலும் வளர்த்தெடுக்கவும் முறைகேடுகளை நீக்குவதற்குமென மூன்று முக்கிய குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரமளவில் நியமிக்கப்படவுள்ள இக் குழுவினர் இராணுவத்தில் புதியவர்களை இணைத்தல், பதவி உயர்வுகள முக்கியமான இடங்களில் படையினரை நிலை நிறுத்துதல் ஆகிய வற்றில் நிகழும் முறை கேடுகள் குறித்து ஆராய்வர்.

மூப்பு அடிப்படையில் படையினர்க்குப் பதவி உயர்வுகளை வழங்காது அவர்களின் திறமைகளின் அடிப்படையில் பதவிஉயர்வு வழங்குவது சம்பந்தமாக சட்டங்கள்மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேவைக் கேற்றபடி பாதுகாப்பு முறையை உருவாக்குவது பற்றியும் இக்குழு சிபார்சு செய்யும் அத்துடன்இராணுவத்தில் நாளுக்கு நாள் ஏற்படும் மாற்றங்களை காணும் போது, இலங்கை தொடர்ந்தும் பிரிட்டன் முறையில் தங்கியிருக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# இன்று முதல் சொந்த இடத்தில் இயங்கும்

(வரணி)

இடம் பெயர்ந்த நிலையில் வடமராட்சியிலும் பின்னர் வரணி மகாவித்தியாலயத்திலும் இயங்கிவந்த இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை இன்று முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக பாடசாலையின் அதிபர் அறிவித்துள்ளார்.

அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த வாரம் வெளியேறியமையை அடுத்தே மேற்படி பாடசாலை சொந்த இடத்தில் இயங்கவுள்ளது. (உ-5)

# அதிபர் சங்க நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணஅதிபர்கள் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் தலைவர் க. இராசதுரை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில்புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் செ. சேதுராசா நெல்லியடி ம.வி., செயலாளர் மு. செல்லையா இளையதம்பி இந்து வித்தியாலயம், பொருளாளர் ச. சிவனேஸ்வரன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(உ)

# வீதிகளில் மண்மேடு போக்குவரத்துக்கு கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் மண் மற்றும் கற்களால் அப்பகுதிகளூடான போக்குவரத்து இடைஞ்சல்களுக்குள்ளாகியுள்ளது.

தொலைத் தொடர்பினை விஸ்தரிக்கும் பொருட்டு, இணைப்புகளை நிலத்திற்கு கீழால் மேற்கொள்வதற்காக வீதியில் ஒரு மருங்கில் மண் வெட்டப்பட்டு பைப்தாழ்க்கப்பட்டது

இதன்போதுவெட்டப்பட்ட மண் மற்றும் கற்கள் மேடாகக் குவிக்கப்பட்டு பல நாட்களாக கவனிப்பார் அற்றுக் கிடக்கின்றது.

இதனால் மக்கள் போக்குவரத்திற்கு பெரும் கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதுடன், விபத்துக்களும் பெருமளவில் இடம்பெறுகின்றன.

மக்களின் தொலைத் தொடர்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தற்போது தொல்லை தரும் விடயமாக மாறியிருப்பது குறித்து மக்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

(உ)

# விற்பனையாகும் உப்பின் அயடீன் செறிவு மதிப்பீடு

(மந்திகை)

யாழ். குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனையாகும் உப்பின் அயடீன் செறிவு மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி இப்பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதிகளிலுள்ள சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உணவுமருந்துகட்டுப்பாட்டு பரிசோதகர் ரி. மகாதேவன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

(உ-23)

# மைற்ஸ் நோய்த் தாக்கம் கட்டுப்படுத்த ஏற்ற நடவடிக்கையில்லை

(கல்வயல்)

தென்மராட்சியின் கொடிகாமம், உசன், மிருசுவில், சச்சாய், அல்லாரைப் பகுதிகளில் தென்னைகளைத் தாக்கும் மைற்ஸ் நோயைக் கட்டுப்படுத்த ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லையென புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பெருமளவு தென்னைகள் அழிந்து விட்ட நிலையில் எஞ்சியுள்ள தென்னைகளையும் இந் நோய் தாக்குவது மரத்தால் விழுந்தவனை மாடேறி' மிதிப்பது போல் அமைவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மைற்ஸ் நோய் மருந்து தெளிப்பெனக்கூறி, ஏமாற்று நடவடிக்கைகள் பலஇப்பகுதியில்இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-111)

# கிறிஸ்தவ வாலிபர் சங்க கொழும்புக் கிளை உறுப்பினர்கள் வருகை

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களிடையேயான சமாதான விருப்பை அறிதற்பொருட்டு கிறிஸ்தவ வாலிபர் சங்க கொழும்புக்கிளையில் இருந்து மூவர் கொண்ட குழு ஒன்று குடாநாட்டுக்கு வந்துளளது.

அருஷாந்த நோனிஸ் - பெல்சியன் பிரான்சிஸ், சுசில் ஹெட்டியாராச்சி ஆகியோரே இவ்விதம் இங்குவந்துள்ளனர்.

இவர்கள், சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல், சமாதான ஆர்வத்தை இளைஞர் மத்தியில் கட்டியெழுப்பல் ஆகிய பணிகளில் இக்குழுவினர் ஈடுபடவுள்ளனர்.

(உ-6)

# வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்தோருக்கு நுளம்பு வலை விநியோகம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் மீளகுடியமர்ந்துவரும் மக்களுக்கு சுகாதார பரிசோதகர்களால் நுளம்புவலை விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதிகளில் கடந்த மூன்று வருடங்களாக பொது மக்கள் வெளியேறியமையால் செடிகள், கொடிகள், பற்றைகள் வளர்ந்துள்ளமையால் பெருமளவு நுளம்புகள் பெருகியுள்ளன. இதனால் மலேரியாமூளைமலேரியாவின் தாக்கங்கள் அதிகரித்துள்ளன.

இதுவரை மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த நானூறு பேருக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

(க-23)

# வடமராட்சி கிழக்கில் மலேரியாத் தாக்கம் தலை தூக்குகிறது

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப்பகுதிகளில், மலேரியாமூளைமலேரியாவின் தாக்கங்கள் அதிகரித்துள்ளதாகசுகாதார வைத்திய அதிகாரி என். ஞானசுதன் தெரிவித்துள்ளார்.

வாரந்தோறும், மீளக்குடியமர்ந்துவரும்மக்களுக்காக நடத்தப்பட்டுவரும் இலவச மருத்துவ முகாமில்இந்நோய்களின் தாக்கங்கள் இனம்காணப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 165 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 22 பேர் மலேரியா நோய்க்கும் 13 பேர் மூளைக்காய்ச்சலுக்கும் உட்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

மூளை காச்சலால் பீடிக்கப்பட்டிருந்த மாமுனையை சேர்ந்தகாண்டீபன் கார்த்திக் (வயது 4) என்ற குழந்தை அம்புலன்சில் உடனடியாக ஏற்றிவரப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இதேவேளை மலேரியா தொற்று நோய்க்கிருமிகளை அழிக்கும் நடவடிக்கையை மலேரியா தடுப்பு இயக்கம் அங்கு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-23)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்துவேறிடங்களில்தங்கியிருந்தமக்களுடைய பெருமளவான வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பெருமளவான வீடுகள் கூரைத்தகடுகளின்றியும் உள்ளன.

இந்நிலையில் வீட்டு வசதிகளின்றி வறுமை கோட்டின் கீழ் வாழும் பெருமளவான மக்கள்பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இந்நிலையில் மக்களுக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளைஅடுத்து, வீடமைப்பு அதிகார சபையினால் 4ஆயிரம் கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து மீளகுடியமர்ந்த மக்களுக்கு இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ-23)

# பத்மநாதனின் 'தேசவழமைகள்' நூல் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணம்

## தென்னிந்திய பேராசிரியர் வேதாசலம் புகழாரம்

(தென்மராட்சி)

பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய 'தேச வழமைகள்' நூல் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணம். ஈழத்தமிழர்களுடைய வாழ்வியல் முறைகள், பழக்கவழக்கங்கள் பண்பாட்டு முறைகளை மிகவும் சிறந்த முறையில் இதில் உள்ளடக்கி வெளியிடப்பட்டிருப்பது பாராட்டிற்குரியதாகும்;

தமிழ்நாடு தொல்லியற்துறையைச் சேர்ந்த கல்வெட்டாய்வாளரான பேராசிரியர் வெள்ளைச்சாமி வேதாசலம் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற தேச வழமைகள் நூல் அறிமுக விழாவில் அறிமுகவுரைநிகழ்த்தும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் வேதாசலம் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

தமிழகத்தில் பலராலும் மதித்துப் போற்றப்படுகின்ற ஒரு தலைசிறந்த பேராசிரியர் பத்மநாதன். குறிப்பாக அவருடைய ஆய்வைப் பற்றிச் சொல்வதை விட அவருடைய பண்பைப் பற்றிச் சொல்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். தமிழர்பால், தமிழ்பால், தமிழர் பண்பாட்டின்பால் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடு அளப்பரியது.

பேராசிரியரால் வெளியிடப்பட்ட தேசவழமைகள் நூல் ஒரு அரிய ஆவணமாகும். தமிழ் வரலாற்று ஆசிரியர்களுக்கு இது ஒரு பெரும் பொக்கிஷம் என்பதைக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

வாழ்த்துரை வழங்கிய தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்,

தேச வழமைகள் நூலின் ஆசிரியரான பேராசிரியர் பத்மநாதனும் நானும் எமது பள்ளிப்பருவம் தொட்டே அறிமுகமானவர்கள். அவர் தமிழ் சமுதாயத்தின் பால்பற்றும் பாசமும் கொண்டவர். தமிழர்களின் பழக்க வழக்கங்கள், வாழ்வியல் முறைகள் பற்றிய ஆய்வுகளை நீண்டகாலமாகச் செய்து வருபவர்.

தமிழ்மக்களுடைய பண்பாடுகளையும் வாழ்க்கை முறையையும் மிசவும் தெளிவாக இந்நூலில் வெளியிட்டுள்ளார். இப்படியான ஒரு அருமையான நூலை தமிழ்ச் சமுதாயத்துக்கு வழங்கியமைக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்றார்.

(உ-77)

# முக்கிய கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்துக் கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துமகளிர் கல்லூரியிலும்,

வணிகர் கழகம், தனியார் சிற்றூர்திச் சேவைச்-சங்கம், விவசாய சம்மேளனம் என்பவற்றின் தலைவர் செயலாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்றுபி.ப 2மணிக்கு தென்மராட்சி அரசியல் துறைச் செயலகத்திலும் இடம்பெறவுள்ளதாகவும்,

சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளும்படியும் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் கேட்டுள்ளார்.

(உ-8)

# மருத்துவ சேவை வழங்குமாறு அழைப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலுள்ள பொதுமக்கள்மீளகுடியமர்ந்து வருவதனால் இப்பகுதியில் நடமாடும் மருத்துவ சேவையினை நடத்துமாறு இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்ப்பாணக்கிளை, கியூடெக் நிறுவனம் என்பனவற்றுக்கு மருதங்கேணி பிரதேச செயலர் வி.பி. வேலாயுதம்பிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள்மீளக்குடியமர்ந்து வருவதனால்இப்பகுதியில் அதிகளவான மக்கள்மலேரியாமற்றும் தொற்று நோய்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இவர்கள் போதியமருத்துவ வசதிகளின்றி கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(உ-23)

# யானைத் தந்தங்கள் மீட்பு

(கொழும்பு)

மாதம்பைப் பகுதிகளில் உள்ள வீடொன்றில் இருந்து 5 யானைத்தந்தங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சுமார் 90 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த யானைத் தந்தங்களை கொழும்பில் இருந்து சென்ற பொலிஸாரே கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(வ)

# தலைக்கவசம் அணிந்து திருடர் கைவரிசை

(கல்வயல்)

மோட்டார் சைக்கிள் திருடர்களின் கைவரிசை குடாநாட்டில் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் கட்டாயமாக தலைக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்ற வீதிக்கண்காணிப்பு பொலிஸாரின் உத்தரவைச் சாதகமாகப் பயன்படுத்தும் மேற்படி திருடர்கள், தம்மை அடையாளம் காணாதிருப்பதற்காக கண்ணாடி மற்றும் தலைக்கவசத்தையும் அணிகின்றனராம்.

இதேவேளை, மோட்டார் சைக்கிள் திருடர்கள் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் அருகில்திக்குவாய் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளனர்.

(உ-111)

# மோட்டார் சைக்கிள் ஓட்டும் பயிற்சியில் இளைஞர் - யுவதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலக முன்றலில் பெருமளவு இளைஞர் யுவதிகள் மோட்டார் சைக்கிள் ஓட்டும் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்.குடாநாட்டில்வாகன அனுமதிப் பத்திரங்களை போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிஸார் பார்வையிட ஆரம்பித்திருப்பதையடுத்து;

தத்தமக்கு வேண்டிய வாகன.அனுமதிப் பத்திரங்களைப் பெறும் வகையிலான செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றும் நோக்கிலேயே இவர்கள் இவ்வாறு பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கார் ஓட்டும் பயிற்சியிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

(உ-2)

# யுத்தத்தால் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்திற்கு மீள முடியாத நட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 3 கோடிரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளரான க. தேவகுமார் தெரிவித்துள்ளார்.

இப்பாரிய இழப்புக்காரணமாக சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினை அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்ல முடியாமல் இருப்பதாகவும்,

வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் தற்போது இயங்கிவருகின்ற கூட்டுறவுக் கிளைகளை பழைய இடத்திற்குக் கொண்டுவர முடியாத நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சங்க எல்லைப்பரப்பில் தற்போது 10 கிளைகள் மட்டுமே இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

# குடிநீர் பெற குடத்திற்கு 50 சதம் வழங்க வேண்டியதில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் கட்டணம் இன்றி இனிமேல் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

நெடுந்தீவுபிரதேசசபையால் நிர்மாணிக்கப்பட்ட பொது நீர்த்தொட்டிகளில் பெறும் நீருக்கு குடம் ஒன்றுக்கு 50 சதம் இதுவரை அறவிடப்பட்டு வந்தது,

இம் மாதம் 20 ஆம் திகதி முதல் இக் கட்டண அறவீடு நிறுத்தப்பட்டிருப்பதாக மேற்படி பிரதேச சபை அறிவித்துள்ளது.

(உ-250)

## தரம் 05 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள் 12 பகுதி II இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01. சி.செந்தூரன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
02. பி.டியோனிஸ்கூரே, சென் ஆன்ஸ்ற்.
03. வி.தீபன்ராஜ், ஆனைப்பந்தி மெ.மி.வி.
04. ப.கோபிநாத், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
05. ர.சரண்யா, வல்வெட்டித்துறை றோ.த.க. பாடசாலை.
06. பி.ஜோதிகா, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
07. ப.சோபியா, நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை.
08. பு.சந்திரகுமாரி, வல்வெட்டித்துறை ம.ம. வித்தியாலயம்.
09. வே.ஜெயவதனி, வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை.
10. பி.நந்தினி, வல்வெட்டித்துறை ம.ம. வித்தியாலயம்.
11. பி.யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாலயம்.
12. யோ.சுவேதினி, வல்வெட்டி இ.த.க பாடசாலை.
13. யோ.அசாத், அளவெட்டி றோ.த.க. வித்தியாலயம்.
14. செ.கோபிகா, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
15. ச.திபாகர், இந்து ஆரம்பப் பாடசாலை.
16. வ.லக்ஸ்மன், சென் ஆன்ஸ்ற்.
17. அ.கீதன், பளை மத்திய கல்லூரி.
18. அ.கரிகாலன், தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை.
19. இ.துவாரகா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
20. க.நிரோஜா, கொக்குவில் சீ.சி.த.க. பாடசாலை.
21. சி.சீராளன், யாழ்ப்பாணக் கல்லூரி.
22. ப.சுதர்சினி, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
23. ச.யதுகுலன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
24. இ.கிரிசாந்தன், துன்னாலை மெ.மி.த.க பாடசாலை.
25. நி.பகீகரன், சங்குவேலி அ.த.க. பாடசாலை.
26. கு.தமிழ்மதி, மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை,
27. து.பிரியந்தி, ஸ்ரீஞானபண்டிதா வித்தியாசாலை.
28. தெ.விருஜன், உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை.
29. சா.அஜந்தினி, புனிதமரியாள் வித்தியாலயம்.
30. இ.ராஜ்பாரதி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.
31. இ.துவராகா, கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை.
32. த.ஜனந்தினி, இந்து ஆரம்பப் பாடசாலை.
33. வ.செல்வக்குமரன், கைதடி குருசாமி வித்தியாலயம்.
34. தி.நகுல்ராஜ், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.
35. த.கௌசிகா, தும்பளை சிவப்பிரகாச ம.வி.
36. தி.வசீகரன், இந்து ஆரம்பப் பாடசாலை.
37. ஜெ.நிவிதா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
38. க.திவ்யா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
39. அ.அனுஸ்ரிகா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
40. பா.பிறேமசியா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
41. வா.நிலானி, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
42. ச.ஏஞ்சலின் நிவேதிகா, உடுவில் மகளிர் கல்லூரி.
43. த.திருமகள், வேலணை ஐயனார் வித்தியாலயம்.
44. அ.சிந்துயா, வேலணை ஐயனார் வித்தியாலயம்.
45. ஆ.நிரோஜா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
46. ச.கீர்த்திகா, உடுவில் மகளிர் கல்லூரி.
47. சி.சிவேஸ், அருணாசலம் வித்தியாலயம்.
48. நா.பிரகாஷ், காசிப்பிள்ளை வித்தியாசாலை.
49. பு.சென்போல், றோ.க.த.க.பாடசாலை.
50. இ.சஞ்சீவன், றோ.க.த.க.பாடசாலை.
51. இ.நேசராஜ், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
52. இ.லக்ஷன், நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்.
53. சு.சூர்யா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
54. யோ.சுதன்யா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
55. வி.கிரிஜா, நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை.
56. வ.நிரோசாந், சென்ஜோன்ஸ் கல்லூரி.
57. சு.நிகிந்தன், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
58. த.தனுசிகா, கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
59. க.கஸ்தூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
60. சா.துஷாந்தன், உருமபிராய் றோ.க.த.க.பாடசாலை.
61. சா.சுசிந்தன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
62. ஸ்ரீ.அகிலாண்டேஸ்வரி, கொடிகாமம் அ.த.க.பாடசாலை.
63. ச.கணேஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
64. த.வஜீரா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
65. S.விதுரன், புனித ஜோன் பொஸ்கோ.
66. நி.பகீர்த்தன், கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை.
67. லூயிஸ்வேஜியாலியாலினி, புனித ஜோண் பொஸ்கோ.
68. செ.ஜெகப்பிரியா, சென் ஜோண் பொஸ்கோ.
69. செ.பிரியங்கா, திருக்குடும்பக் கன்னியர் மடம்.
70. ச.விஸ்வரூபன், வல்லை மகளிர் வித்தியாலயம்.
71. ப.லக்ஷனா, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
72. செ.தாட்சாயினி, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
73. ஸ்ரீ.தருசன், இந்து ஆரம்பப் பாடசாலை.
74. சி.நிருத்திகா, தேவரையாளி இந்துக் கல்லூரி.
75. ப.மதுசாந், தமிழ் கந்தையா வித்தியாலயம்.
76. தி.ஜிந்தூரகன், புனித ஜோண் பொஸ்கோ.
77. வி.அனுசியன், மத்திய கல்லூரி.
78. வ.ஆஷிகா, புனித ஜோண் பொஸ்கோ.
79. ப.குபேரன், விசாலாட்சி வித்தியாசாலை.
80. ஸ்ரீ.சரண்யன், சைவத்தமிழ் வித்தியாலயம்.
81. ப.ஆரணி, தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
82. வி.நிரோஷன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
83. க.துவாரகன், இந்து ஆரம்பப் பாடசாலை.
84. பா.ஸ்ரீகன், யாழ்ப்பாணக் கல்லூரி.
85. க. தனுஷ்ன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
86. ஞா.தினேஸ்றைமன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
87. ஞா.சாம்சன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
88. மு.கிருஷன், றோ.க.த.க வித்தியாலம்.
89. க.கபிலேஸ்வரி, றோ.க.த.க வித்தியாலம்.


ஐக்கிய சோசலிசக் கட்சி நேற்று யாழ் பஸ்நிலையப்பகுதியில் ஜே.வி.பிக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டத்தை முதற் படத்திலும், பொலிஸார் ஆர்ப்பாட்டத்தை தடுக்க முற்படுவதை 2வது படத்திலும் காணலாம். (படம்:துஷ்யந்தன்)

### சமாதான...

கிடைத்ததெல்லாம் அடியும் உதையும் சிறையும் சித்திரவதையும் கொலைகளும் அழிவுகளும் தான். ஆம் அடிமைகளாகக் கூட தமிழர்கள இலங்கைத் தீவிலே வாழ முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்ட போதுதான் வரலாறு ஆயுதப் போராட்டமாக மாறியது.

இந்த ஆயுதப் போரட்டத்தின் வளர்ச்சியும் அதன் பலமுமே சிங்கள தேசத்திலும், சர்வதேசத்திலும் ஒரு மனமாற்றம் உருவாகுவதற்கு காரணமானது என்பதே வரலாற்று உண்மை. ஆம், சிங்களதேசம் சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்டது. இதன் பயனைத் தான் ஸ்ரீலங்காவின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கும்,தமிழீழத்தின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாதானது.

சமாதானத்துக்கான ஆணையை சிங்கள மக்கள் அரசிற்கு வழங்கியபோதும் அதற்கெதிரான கோசங்களும், ஆர்ப்பாட்டங்களும் கண்டக் கூட்டங்களும், ஊர்வலங்களும் தென்னிலங்கையில் நடந்த வண்ணமே இருக்கின்றன. ஆனால் வடகிழக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராகவோ, சமாதானத்திற்கு எதிராகவோ ஒரு தமிழன் தானும் இது வரை குரல் கொடுக்கவில்லை மாறாக நாங்கள் இங்கு நடத்துகின்ற வெகுஜனப் போராட்டங்கள் எல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஆதரவாக சமாதானத்திற்கு ஆதரவாக நடாத்துகின்றோம். இந்த வேறு பாட்டை உலகமும் சிங்கள தேசமும் ஏன் இங்கு இருக்கின்ற படைத்தரபபினரும் புரிந்து கொள்ளவேண்டும். நாங்கள் அரசிற்கு எதிராகவோ, படையினருக்கு எதிராகவோ வெகுஜனப் போராட்டங்களை நடாத்துகின்றோம் என்பதைவிட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஆதரவாகவும் அதில் கூறப்பட்ட விடயங்களை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவுமே இந்தப் போராட்டங்களை நடாத்துகின்றோம். ஏனெனில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அத்திவாரத்திலேதான் எதிர்கால சமாதானத்தின் கோபுரம் கட்டி எழுப்பப்பட முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில்தான் இந்த வெகுஜனப்போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். இனிக்காலதாமதமாகும் ஒவ்வொரு கணமும் சமாதானத்திற்கு ஆபத்தை விளைவிப்பதாகவே அமையும். இது வரை... புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் நடந்தேறிவிட்டன.

அதன் உச்சக் கட்டம் தான்... அன்று தீவகத்தில் நடந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மதான கொலை முயற்சியாகும். இந்த சமாதான விரோத காட்டுமிராண்டித்தனமும், கோழைத்தனமுமான அக்கிரமங்களை நாம் இனியும் கண்மூடித்தனமாக பார்த்திருக்க முடியாது. எனவே அரசாங்கம் இந்த சமாதான விரோதிகளுக்கெதிராக காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடையங்களை விரைவாக அமுல் படுத்தி சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்காக தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசி நிரந்தரமான - நீதியான தீர்வைக்காண வேண்டும். (10ம் பக்கம் பார்க்க)


# உடன் தேவை



புதிதாக ஆரம்பித்த தையலகத்திற்கு வெட்ட, தைக்க அனுபவமுள்ளவர்கள் தேவை உடன் நேரில் வரவும்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்
(யாழ். மாநகர சபை முன்பாக) (C/4529)

குகமயம்

# நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
# குடமுழுக்குப் பெரும் சாந்திப் பெருவிழா

**26 06.2002 இன்று முதல்**

இன்று (26.06.2002) புதன்கிழமை காலை சூரிய உதயத்தில் கிரியைகள் ஆரம்பமாகி காலை 7.00 மணி முதல் மாலை 5.00மணிவரை எண்ணெய்காப்பு இடம்பெறும்.



**27.06.2002 நாளை வரை**

நாளை 27.06.2002 வியாழக்கிழமை சிங்க லக்கின சுபவேளையில் பகல் 9.30மணி முதல் 11-18மணிவரை உள்ள உத்தம காலத்தில்.



எம்பெருமான் பால முருகனுக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்

கட்டட நிர்மாணம்: அராலியூர் க.விக்னேஸ்வரன் சிற்பாச்சாரியார் குழுவினர்

(C/4522) தேவஸ்தானம்

# மலைப் பகுதியில் ரயில் விபத்து

# 200 பேர் மரணம்; பலர் படுகாயம்

## தன்சானியாவில் பரிதாபச்சம்பவம்

(டார்சலாம்)

தன்சானியாவில் இடம் பெற்ற ரயில் விபத்தில் 200 பேர் பலியாகியுள்ளதுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமடைத்துள்ளனர்.

தன்சானியாவின் மலைப் பிரதேசமொன்றில் சென்று கொண்டிருத்த ரயில் இயந்திரக் கோளாறு காரணமாக பின் நோக்கி நகர்ந்து பின்னால் வந்த சரக்கு ரயிலுடன் மோதியதனாலேயே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

இதே வேளை விபத்துக்குள்ளான புகையிரத வண்டியின் சில்லுகளுக்குள் இருந்து மேலும் பல சடலங்கள் மீட்கப்பட்டு வருவதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (உ-8)

## பலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேலியபடை ஊடுருவல்

(ரெல் அவிவ்)

இஸ்ரேலியகவசப் படைகள் அண்மையில் மீண்டும் பலஸ்தீனப் பகுதிக்குள் ஊடுருவியுள்ளன.

சுமார் 60 கவசவாகனங்கள் சகிதம் நேற்றுக்காலை பலஸ்தீன மேற்குக் கரைக்குள் நுழைந்து சில கட்டிடங்கள், நகரங்களை ஆக்கிரமித்துள்ளது.

பலஸ்தீனஅதிகார சபையை கவிழ்க்கும் நோக்குடன், பலஸ்தீனப் பகுதிகளை மீண்டும் ஆக்கிரமிப்பதற்கு இஸ்ரேலிய அமைச்சரவை தீர்மானம்எடுத்துள்ளதும் தெரிந்ததே. (க-8)

## ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அடுத்த மார்ச் வரை தேர்தல்கள் இல்லை

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அடுத்தவருடம் மார்ச் மாதம்வரை சட்ட மன்றத் தேர்தல் நடைபெறாது என தேர்தல் வட்டார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசும், மாநில அரசும் இந்ததேர்தலை நடத்துவதற்கு தயாராக வில்லை என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜம்மு - காஷ்மீர் மாநில முதலமைச்சர் பாருக் அப்துல்லா தேசிய மாநாட்டுகட்சிப் பொறுப்பை தனது புதல்வர் ஓமர் அப்துல்லாவிடம் கையளித்துள்ளார்.

ஓமர் அப்துல்லா இந்திய வெளிவிவகாரதுணை அமைச்சராக பதவிவகித்துவருவதுடன் தனது இப்பதவியை ராஜினாம செய்ய எண்ணி உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-8)

## அனுமதிப் பத்திரங்கள் ரத்து

(கொழும்பு)

ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கு அண்மையில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதிப் பத்திரங்கள் உடனடியாக ரத்துச் செய்யப்படவுள்ளன.

ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்கும் அண்மையில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களின் தூரங்களை அளந்து கணக்கு எடுக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதற்கான பணிகளை புத்தசாசன அமைச்சு துரிதமாக மேற்கொண்டு வருகிறது (ம)

## சூனியக்காரர் கொலை ஆந்திராவில் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் சூனியக்காரர்கள் என்னும் சந்தேகத்தில் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களாக பொலிஸாரும் பொது அமைப்புகளும் சில நடிகர்களும் இணைந்து சூனியம் என்பது வெறும் மூடநம்பிக்கை என்று இம்மாநிலத்தில் பெருமெடுப்பில் பிரசாரம் செய்து வருகின்ற போதிலும், இம்மூடக் கொள்கையை முறியடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை சூனியக்காரர்என சந்தேகிக்கப் பட்ட முஸ்லிம் ஒருவர் கல்லால்எறிந்து கொலைசெய்யப் பட்டுள்ளார்.

300 ஆண்டுகளாக இருந்து வரும் இந்த மூடநம்பிக்கையை இரண்டுமாத பிரசாரத்தால்மாற்றிவிட முடியாதென காவல்துறை அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (த)

## மீளக்குடியமர தயக்கம்

நுணாவில் கிழக்குப் பகுதியில் அதிக வீடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதாலும், இராணுவ முகாம்கள் கூடுதலாக இருப்பதாலும் குடும்பங்கள் மீளவும் குடியமரத் தயக்கம் காட்டி வருவதாகவும் அறியப்படுகின்றது. (உ-77)

## தமிழ் விழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தமிழ்ச்சங்கத்தினரால் நடத்தப்படும் 'தமிழ் விழா' எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 'சி. வை. தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு' என்ற நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (உ-79)

## வடமராட்சி கிழக்கில் பாடசாலைகளை மீள இயக்கக் கோரிக்கை

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மேலும் சில பாடசாலைகளை மீள இயக்குமாறு மருதங்கேணி பிரதேச செயலர் வி.பி. வேலாயுதபிள்ளை வலயக் கல்விப்பணிப் பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் செம்பியன் பற்றிலிருந்து சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து தற்காலிகமாக வன்னிப் பெருநிலப்பரப்பு, யாழ் குடா நாடு பகுதிகளில் வசித்து வந்த மக்கள் தற்போது மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மக்கள் மீள குடியமர்ந்துள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளான மாமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, தாழையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் கேவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றை மீள இயக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதே வேளை பாடசாலைகள் மீள இயங்காமையால் அப் பகுதிகளில் மீளக் குடியமர மக்கள் பின்னடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## மாவோ தீவிரவாதிகள் 59 பேர் சூட்டுக்கு பலி

### நேபாளத்தில் சம்பவம்

(காட்மண்டு)

நேபாளப்படையினர் மாவோ தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 59 பேரை அண்மையில் சுட்டுக் கொன்றுள்ளதாக நேபாள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இருவெவ்வேறு சம்பவங்களில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனஅவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அண்மைக் காலங்களாக இவ் விருதரப்பினர்களுக்கும் இடையே பரஸ்பரம் மோதல் இடம்பெற்று வருவது தெரிந்ததே. (க-8)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புவியியல் துறையின் ஏற்பாட்டில் இன்று பி.ப 3 மணிக்கு 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் கோலங்கள்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புகையிரதத் திணைக்கள முன்னாள் பிரதி வணிக அத்தியட்சகர் த. விநாயகமூர்த்தி இதில் கருத்துரை வழங்கவுள்ளார். (உ)

## சுதந்திரத்திற்கான ஜனாதிபதி விருது நெல்சன் மண்டேலாவிற்கு

(வாஷிங்டன்)

சுதந்திரத்திற்கான ஜனாதிபதி விருது முன்னாள் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கு வழங்கப் பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இதனை வழங்கியுள்ளார்.

30 ஆண்டு காலங்களாக தென் ஆபிரிக்காவில் நடந்து வந்த உள்நாட்டுச் சிக்கல்கள் மத்தியில் தொடர்ச்சியாக அரசியல் கைதியாக இருந்த மண்டேலா, பின்னர் அந்நாட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை தெரிந்ததே.

எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி விருது வழங்கும்வைபவத்தில்மேலும் சிலர் கௌரவிக்கப்படவுள்ளனர். (உ)

## ஒரு நாளில் 9 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்துக்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

35 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## விமானப் பாகங்கள்குறித்து மர்மம் துலங்குகிறது

(கொழும்பு)

ரஷ்யாவில் இருந்து கொழும்பு துறைமுகத்துக்கு இரண்டு கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட விமானத்தின் உதிரிப்பாகங்கள் குறித்த சிலதகவல்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

மேற்படி உதிரிப்பாகங்களை அண்மையில் கொழும்புத்துறைமுகத்தில் வைத்துசுங்கப்பகுதியினர் கைப்பற்றியதையடுத்து சந்தேகத்தின் பேரில் கொட்டாஞ்சேனை வாழ் தமிழர் ஒருவரை சீ. ஐ. டியினர் விசாரணை செய்தனர்.

2 என்ஜின்கள் உட்பட விமானத்தின் உதிரிப்பாகங்களை இந்தியாவுக்கு அனுப்பி அவற்றை இரும்பாகவார்த்து எடுக்க தான் திட்டமிட்டிருந்ததாகவும்,

நேரடியாக இந்தியாவிற்கு ரஷ்யாவிலிருந்து மேற்படி விமானப் பாகங்களை தருவிப்பதில் சிக்கல்கள் இருப்பதால் முதலில் அவற்றை இங்கு இறக்கியதாகவும் அச்சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

கொள்கலனுடன் அவற்றை இந்தியாவிற்கு கப்பல்மூலம் தூத்துக்குடி வழியாக அனுப்புவதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அதிகாரிகள் இவ் விவகாரத்தை இந்தியாவிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளனர் அங்கிருந்து பதில்வரும்வரை சந்தேகநபர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

## பஞ்சத்தால் வாடும் வடகொரியருக்கு தஞ்சமளிக்கும் தாவரங்கள்

(ப்யொங்யொங்)

வடகொரியாவில் ஏற்பட்டுள்ள பஞ்சம் காரணமாக அங்குள்ள மக்கள் புல், கடற்தாவரங்களை உண்டுவருவதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவில் மேலும் மிக மோசமான பஞ்சம் ஏற்படலாம் என எதிர்வு கூறியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட நிறுவனம் அங்கு வாழும் மக்களும், மாணவர்களும் தமது அன்றாட கடமைகளிலிருந்து விலகிவருவதாகவும். தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் மலைப் பகுதிகளில் மக்கள் உணவுகளிற்காக அலைந்து வருவதாகவும் கடற்கரை யோரங்களில் கடற் தாவரங்களைச் சேகரித்து உண்டு வருகிறார்கள் எனவும் உணவுத் திட்டத்தின் பேச்சாளர் ஜெரால்ட் வோட் தெரிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்திற்கு அன்பளிப்புக்களை வழங்கிவரும் நாடுகளின் வாக்குறுதிகள் நிறை வேற்றப்படாத காரணத்தால் அங்கு 12 இலட்சம் மக்களின் உணவு வழங்கும் திட்டம் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது. (உ-8)

## திருட்டு அதிகரிப்பு

(கோப்பாய்)

கடந்த சில நாட்களாக கோப்பாய் இராச வீதிப் பகுதியில் இரவு வேளைகளில் திருடர்கள் தொல்லை அதிகரித்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நாள் இடைவெளியின் பின்னர் இப் பகுதித் தோட்டங்களிலுள்ள வெங்காயம்,லீக்ஸ், வாழைக்குலை போன்றவை திருடப்பட்டு வருவதாகவும் இந்த நடவடிக்கையைத் தடுக்க சம்பந்தப் பட்டவர்கள் ஆவன செய்ய முன்வர வேண்டுமெனவும் விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-79)

## சாரதிகளுக்கான அபராதத் தொகை 400 ரூபாவால் அதிகரிக்கும்

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளின் அபராதத் தொகையை மேலும் 400 ரூபாவால் அதிகரிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டுவருகிறது.

நாட்டில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதனாலேயே அபராதத் தொகையை அதிகரிக்குமாறு பொலிஸ் தரப்பில் இருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்தது.

மோட்டார் போக்குவரத்து கட்டுப்பாட்டுச் சட்டங்கள் திருத்தப்படும் வரை இப்புதிய அபராதத் தொகை அமுல் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் ஓரிரு மாதங்களில் மோட்டார் போக்குவரத்து கட்டுப்பாட்டுச் சட்டங்கள் நடைமுறையில் வரவுள்ளதுடன், கடந்த காலங்களில் அபராதத் தொகையாக 200 ரூபாவே இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது .(உ-8)

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர்.

குறள்

# வலம்புரி

## தமிழ்-முஸ்லிம் உறவு அவசியம்

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம்செய்து கொண்டதன் மூலம் ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு பிரஜைகளினதும் கடமையாகும்.

பொதுவாக அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் போதெல்லாம் தமிழ்- முஸ்லிம்- சிங்கள- முஸ்லிம் மக்களிடையே இனவாதத்தைத் தூண்டிவிட்டு அதன் மூலம் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடும் நடவடிக்கைகள் காலாகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தகைய முயற்சிகளால் சமாதான முன்னெடுப்புகள் இடைநடுவில் அறுந்துபோனதுமுண்டு.

அத்தகையதோர் முயற்சி தற்போதைய சமாதான சூழ்நிலையிலும் முன்னெடுக்கப்படுவது போல் தெரிகிறது.

முஸ்லிம் மக்களுக்கும், தமிழ்மக்களுக்குமிடையே ஓர் இனச் சண்டையைக் கிளப்பிவிட்டு சமாதான முயற்சியைக் குழப்பதிரைமறைவில் சதி நடப்பது மூதூர்ச் சம்பவத்தை நோக்கும் போது புலப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையேயான ஒற்றுமையை வலுப்படுத்தும் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் இன விரோதத்தைத் தூண்டிவிடும் தீய சக்திகளின் கபட நோக்கத்திற்கு தமிழ்- முஸ்லிம் மக்கள் பலியாகிவிடக் கூடாது.

மூதூரில் ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ்,முஸ்லிம் மக்களிடையே இன விரோதத்தை ஏற்படுத்தும் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும் அதனை முறியடித்து தமிழ்- முஸ்லிம் மக்களிடையே நல்லுறவைப் பேணுவது மிக மிக அவசியமாகும்.

இத்தகைய நல்லுறவைப் பேணுவதற்கு தமிழ்- முஸ்லிம் மதத் தலைவர்கள், கட்சிப் பிரமுகர்கள் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவசியமாகும்.

# அம்பிகையைத் தரிசிக்கவரும் அனைவருக்கும் அமுதசுரபியாக அன்னம் சுரக்கும் நயினாதீவு

**மு. நா. நடராசா**
நயினாதீவு

ஈழத்தின் வடபால் யாழ். குடா நாட்டிற்குத் தென்மேற்கில் வரலாற்றுப் பெருமையும் தெய்வீகப் பொலிவும் ஒருங்கே பெற்று சிறப்புடன் திகழ்வது நயினாதீவு.

ஐம் பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் ''மணிபல்லவம்'' எனவும்; பௌத்த இலக்கியமான மகாவம்சத்தில் ''நாகதீபம்'' எனவும் குறிப்பிடப் படுவது இத்தீவே என்பதுசில வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும்.

இங்கு அம்பிகை; அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான ''புவனேஸ்வரி பீடத்தில் ஸ்ரீ நாகபூஷணி என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள்.

பசிக்களை

இற்றைக்கு அரை நூற்றாண்டுகளின் முன்பு அம்பிகையைத்தரிசிக்க வரும் பல்லாயிரக் கணக்கான அடியார்களின் உணவு வசதிகள் திருப்திப் படத்தக்க நிலையில்; போதுமானதாக இருக்கவில்லை.

உயர் திருவிழாக் காலங்களில் ஆலய சுற்றாடலில் அமைக்கப்படும் சிற்றுண்டிச் சாலைகளிலும் அடியார்கள் சிலரினால் கொடுக்கப்படும் சிறுசிறு அன்னதானங்களிலுமே அடியார்கள் தங்கள் பசிப் பிணியினைப் போக்கினர்.

பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் அம்பிகையின் தரிசனத்தின் பின் பசிக்களைப்புடனேயே மீண்டும் தம் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

இந்த அவல நிலை கண்டு வேதனையுற்றகருணை மனம் கொண்ட நயினாதீவுப் பெருமக்கள் சிலரின் சிந்தனையில் மலர்ந்தது 'நயினாதீவுஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர் அன்னதான சபை''

இவர்கள் ''அன்பர் பணி செய்ய எமை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும்'' என்று கூறியபடி; இலங்கையின் பிரதான நகர வீதிகள் எங்கும் நடந்தார்கள். காடுமேடுகள் எங்கும் நடந்தார்கள். கிராமம், கிராமமாக நடந்தார்கள். யாழ்ப்பாணம், கொழும்பு வர்த்தகர்கள் பொற்குவையாகவும், அரிசி, பருப்பு, கிழங்கு மூடைகளாகவும் வழங்கினர். கிராமத்து விவசாயிகள் மரக்கறி வகைகளை மூடைமூடைகளாக வழங்கினர். ஆண்மையாளர் உழைப்பினை நல்கினர். உண்டுகளை தீர்ந்தவர்கள் வாயார வாழ்த்தினர்.

அன்னதானம் ஆரம்பம்

ஆரம்பகர்த்தாக்கள் தம் மனத்திலே அரும்பாகிய நினைவு, மொட்டாகவளர்ந்து மலராக விரிந்து காய், கனியாகப் பயன் தருவதைக் கண்டார்கள். கைதான்தலைவைத்துக் கண்களில் நீர் ததும்ப நின்றார்கள் ஆயிரத்து தொழாயிரத்து அறுபதாம் ஆண்டு இருபத்து ஐந்து அங்கத்தவர்களை ஆரம்ப உறுப்பினர்களாகக் கொண்டுஆரம்பிக்கப்பட்ட சபை, அதே ஆண்டு அம்பிகையின் உயர் திருவிழாவின் ஏழாம் நாளிலிருந்து இறுதித் திருவிழா வரை, ஏறக்குறைய எழுநூற்றைம்பது பேர் ஒரேமுறையில் இருந்து உண்ணக் கூடிய கிடுகுகளினாலான பாரிய தற்காலிக கொட்டகையில்அன்னதானத்தைத் தொடங்கியது.

நயினாதீவில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்ஸ்ரீ நாகபூஷணியம்மன்ஆலயத்திலும், பிற ஆலயங்களிலும் சுவாமி தரிசனம் செய்ய வரும் அடியார்களுக்கு அன்னதானமும், நீராகாரமும் இலவசமாக வழங்கி பசி, தாகம், களைப்பு முதலியன தீர்த்தல் என்பதே இச்சபையின் பிரதான நோக்கமாக இருந்தது. உன்னதமான இந்த நோக்கம் நிறைவேற சபை உறுப்பினர்கள் சிந்தியதுவெறும்வியர்வை மட்டுமல்ல, அத்துடன் அர்ப்பணிப்புடனான சேவையையும்சேர்த்தார்கள். அதனால்தான் காலத்தால் அழியாத கருவூலமாக அது இன்றும் நிலைத்து நிற்கிறது.

புதிய மண்டபங்கள்

ஆயிரத்து தொழாயிரத்து அறுபத்து மூன்றாம் ஆண்டு தற்காலிக கொட்டகை தீப்பற்றி எரிந்தது. எரிந்த ஒரு சில மணித்தியாலங்களில் அதே அளவில் கொட்டகை அமைத்து அன்றே அன்னதானம் வழங்கிய செயற்திறனை நயினையின் பிரபல கவிஞர் நாட்டுவளத்தில்-

''ஒருகால் இருக்க
ஒளியோன் எரிக்கஉதவாது
நிற்க வருணன்-
மறுகால்நிறுத்தி ஒரு
நாளிகைக்குள் வளர்
அன்னதான நிலையம்
தருமாறமைத்த தகவீர
மைந்தர் தனையீன்ற
நாடுநயினை.

என்று வியந்து பாடினார்.

நாட்டினால் சிறப்புபெறுபவர்கள் பலர். இவர்களால் நாடு சிறந்தது.

இச் சபையை உருவாக்கியவர்களில் அநேகர் தமதுஇறைபணியின் மூலம் அம்பிகையின் பாதார விந்தம் அடைகின்ற பேற்றினைப் பெற்றுவிட்டார்கள். அமரர்களாகி விட்ட அங்கத்தவர்களின் வெற்றிடங்கள் பொருத்தமானவர்களால் நிரப்பப்பட்டு அன்னதானப் பணி சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

இரண்டாயிரம் யாத்திரீகர்கள் வரை ஒரே தடவையில் அமர்ந்து சாப்பிடக்கூடிய அளவில் பாரிய இரண்டு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏழாம் நாள் உற்சவத்தில் இருந்து வழங்கப்பட்டு வந்த அன்னதானம் தற்போது அம்பிகையின் பதினாறு நாட்கள் மகோற்சவத்திற்கும் வழங்கப் படுகின்றது.

அத்துடன் தைப்பூசம், ஆடிப்பூரம் ஆகிய உற்சவங்களுக்கும் சபை அன்னதானம் வழங்குகின்றது.

நித்திய அன்னதானம்

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சுமுகநிலை காரணமாகத் தினம், தினம் நூற்றுக் கணக்கான இந்து, பௌத்த யாத்திரீகர்கள் நயினாதீவிற்கு வருகின்றார்கள், இவர்களது பசிப்பிணி அகற்றும் பெருநோக்கில் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையினர் 'நித்திய அன்னதான திட்டம்' ஒன்றினைச் செயற்படுத்திவருகின்றார்கள். ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்று எட்டாம் ஆண்டில் நடைபெற்ற மகா திருக்குடமுழுக்குப் பெருவிழாவுடன் ஆரம்பமாகிய இந்த அறப்பணி, ஆலய தெற்கு வீதியில் அமைந்திருக்கும் கல்யாண மண்டபத்தில்! தர்மசிந்தை கொண்ட பெரியோர்களின் உதவியுடன் தினமும் நடைபெறுகின்றது.

அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள், அவள் அருள் பெற்று மன அமைதி பெறுவதுடன் பசிக்களை அகன்று மகிழ்வுடன் திரும்புவதைத் தினமும் அவள் வீதியில் காணலாம். அன்னதான மண்டபங்களில் எம் தாயாகிய நாகபூஷணி, அன்ன பூரணியாக நின்று தன் குழந்தைகளுக்கு அமுதூட்டுகின்ற அருட்காட்சி பார்ப்போர் மனங்களை அதிசயிக்க வைக்கின்றது. ●

## தினசரி தியானம்

### திதிக்ஷை

சஞ்சலம் அற்று எல்லாம் நீ
தான் என்று உணர்ந்தேன் என்
அஞ்சலியும் கொள்ளாய்
அரசே பராபரமே.

- தாயுமானவர்

தகையே, என்னைத் திருத்தியமைத்தற் பொருட்டு நீ துன்பத்தை அனுப்புகிறாய். நான் அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வேனாக.

இறைவனது பெரிய திட்டம் ஓபாது வேலை செய்கிறது என்று அறிபவன் எதிரியை நேசிக்கிறான், பகை, எதிர்ப்பு, புகார் ஆகியவைகளை மீண்டு மேலே செல்லுகிறான். பகைவர் போன்று தென்படுபவர்மூலம் தன்செயலே தனக்குத் திரும்பி வருகிறது. கடன் கட்டுவது போன்று அவன் அமைதியுடன் இன்னல்களைப் பொறுத்துக் கொள்கிறான். புதிய கேடு எதுவும் தன் மனதில் உதிக்க அவன் இடம் கொடுப்பதில்லை.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# வேலணைச் சம்பவத்திற்கு கூட்டுறவுச்சபை கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

வேலணையில் தமிழீழவிடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் அரசியல்பிரமுகர் தயாளன்ஆகிய இருவரும் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து யாழ்மாவட்ட கூட்டுறவுசபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்மாவட்ட கூட்டுறவுச்சங்கத்தலைவர் வெ. கனகசபாபதி தலைமையில் நேற்று காலை நடைபெற்ற தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் ஒன்றிலேயே மேற்கண்ட தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலேணையில் தமிழீழவிடுதலைப்புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளை வியாழக் கிழமை யாழ்குடாநாட்டில் இடம்பெறவுள்ள கண்டனப் பேரணியில் கூட்டுறவாளர்கள் அனைவரையும் ஒன்று திரண்டுகலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(வ)

## மதனராஜா ஆஜராகவில்லை

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை படுகொலைச் சம்பவம் தொடர்பானவழக்கு விசாரணை நேற்று யாழ் நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

படுகொலைச் சந்தேசநபரான ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ் மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா நீதிமன்றில் ஆஜராகாததை அடுத்து எதிர்வரும் 9ம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(த)

## விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ் நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை நீதி மன்றில் சமர்ப்பிப்பதற்கு இரகசியப் பொலிஸார் கால அவகாசம் கோரியதை அடுத்துஎதிர்வரும் 5ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)

## சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்டவிளையாட்டில் ஈடுபட்ட சிறுவன்ஒருவன் கால் முறிந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த தனபாலசிங்கம் துஷ்யந்தன் (வயது 15) என்ற சிறுவனே கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(த)

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
## பொது அறிவுப்போட்டி ~2002

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 20 ரூபா தபால் கட்டளை செ.பரம நாதன் பெயரில் எழுதி, விண்ணப்பித்து வினாத்தாளைப் பெற்றுக் கொள்ளவும்.

**திறந்த போட்டி முடிவு திகதி 31.08.2002**

பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
முகவரி - ஆ. சண்முகலிங்கம்
தலைவர் உ.த.ப இயக்க
இலங்கைக் கிளை
"பரமநாதன் இல்லம்"
மானிப்பாய் வீதி தாவடி
கொக்குவில் P O

(5496)


## துயர் பகிர்கின்றோம்

### திருமதி செல்லத்துரை-சீவநாயகம்

எமது சங்கத் தலைவர் திரு செல்லத்துரை லோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார் அமரர்

**திருமதி செல்லத்துரை - சீவநாயகம்**

அவர்கள் 21.06.2002ம் திகதி மரணமானதையிட்டு ஆழ்ந்த கவலையும், வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்

பணியாளர் ஐக்கிய நாணய சங்கம்
சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்

(5497)

## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் விஜயவர்மன்

(எக்ஸ்போ வீடியோ உரிமையாளர் கோண்டாவில்.)

தாவடியை பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகக் கொண்ட மாணிக்கவாசகர் விஜயவர்மன் 21.06.2002 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பாசமிகு ரேணுகாவின் அன்புக் கணவரும், லஞசனின் பாசமிகு தந்தையும்.

காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும். செல்வரத்தினம், காலஞ்சென்ற பத்மா செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும். மகாலிங்கம் (ஜேர்மனி), விக்கிரமன்(ஜேர்மனி), விமலாதித்தன்(இந்தியா), விக்னேஸ்வரன்(லண்டன்), ராகினி(கொழும்பு), காலஞ்சென்ற ரஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ராஜேஸ்வரி(ஜேர்மனி), சந்திராதேவி(ஜேர்மனி), தேவிகா (இந்தியா) தயாபரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-சுயா தீன தொலைக்காட்சி நிலையம்), ரதிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆத்மன், அனித்தா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆரபி, ஆதவன், ஆதர்ஷன்(ஜேர்மனி), வித்தியா, கீர்த்திகா, பானுமீரா, செந்தூரன், வில்மா(இந்தியா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பிரசாந்தினியின்(கொழும்பு) பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.06.2002 இன்று புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன்

(C.4528)

7ம் பக்கத் தொடர்ச்சி

அன்பார்ந்த தமிழ் மக்களே! அளப்பரிய அர்ப்பணிப்புக்களால் கிடைத்த இநத அரிய சமாதானச் சூழலை குழப்பி போரின் மூலம் சுயலாபம் தேட முறபடும் இனவிரோத, சமாதானவிரோத கும்பல்களின் அக்கிரமங்களுக்கெதிராக கிளர்ந்தெழுந்து போராடுவோம். நீதிக்காக குரல் கொடுப்போம். நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம். அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு எழுவோம். வாழ்க நீதி! வளர்க சமாதானம்.

நிராயுத பாணிகளாக நின்று சமாதானத்திற்காக மக்கள்பணி செய்த விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மீதான தாக்குதலையும் கொலை முயற்சியையும் கண்டித்தும் நீதிக்காகவும் நிரந்தர சமாதானத்திற்குமான மக்கள் பேரணி.யாழ் மாவட்டத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் அனைத்து மக்களையும்கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம.



## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பிதழ்



அன்புடையீர்

நிகழும் மங்கள கரமானசித்திரபானு வருஷம் ஆனி மாதம் 13ம் நாள் (27.06.2002) வியாழக்கிழமை (ப.நே) காலை 10.27 மணி தொடக்கம் 11.18 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் .

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற



## விதுர்ஷிகா நகையகம்



என்னும் புதிய தங்க நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணை கொண்டு திறப்புவிழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

1/5B கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்
விதுர்ஷிகா நகையகம்




சிவமயம்
வாழ்க அன்னையின் திருவருள்
வளர்க மணமக்களின் ஆத்மபலம்



## மங்களகர அழைப்பிதழ்

| | | | |
|---|---|---|---|
| எங்கள் | குலமகனும் | எங்கள் | குலமகளும் |
| மங்கல | மணவாழ்வில் | மகிழ்ந்து | கைபிடிக்கும் |
| இங்கிதம் | பொங்கிடும் | நல்இனிய | வேளைதனில் |
| தங்கள் | நல்வரவை | அன்புடன் | வேண்டுகின்றோம் |
| வந்து | மணமக்கள் | மகிழ | ஆசிகூறி |
| எங்கள் | விருந்துணவை | ஏற்று | மகிழ்ந்திடுவீர் |

எமது கனிஸ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**மாயாகரன் (சுரன்)**
அவர்கட்கும்



எமது சிரேஸ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**சுகந்தி (சுகா)**
அவர்கட்கும்

**சித்திரபானு வருடம் ஆனித்திங்கள் 13ம் நாள் (27.06.2002) வியாழக்கிழமை சுபமங்களம் பொருந்திய சுபமுகூர்த்த நேரம் முற்பகல் 9.30 மணி தொடக்கம் 11.18 மணிவரை மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் கூடி வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி**

தகவல்:

(C.4528) மனைவி, மகன்

# உடன் தேவை

உடைந்த போத்தல் ஓடு, கறுப்பு, வெள்ளை பழைய கடதாசி மட்டை, வெற்று பியர் போத்தல்கள், வெள்ளை வெட்டுக் கழிவுப் பேப்பர்கள் என்பன கொள்வனவு செய்யப்படும். பொருள்களுக்கு ஏற்ப தகுந்த விலை வழங்கப்படும். வைத்திருப்பவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**பாலன் இரும்பு வாணிபம்**

இல. 256, கஸ்தூரியார் றோட்,
கன்னாதிட்டிச் சந்தி (மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

T.P NO: 021-2525

(C/4519

[illegible]
பத்தினருடன் கூடி வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- 30.06.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மகமஜன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி கந்தசாமி அன்னலட்சுமி
விக்னேஸ்வரா வீதி
சங்கானை



திரு. திருமதி பசுபதி
இராசேந்திரம்
ஊரெழு கிழக்கு
ஊரெழு

(இரு இல்லத்தார் அழைப்பு)

(C/4523)

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 13ம் நாள் (27 .06.2002) வியாழக்கிழமை (ப.நே) காலை 10.27 மணி தொடக்கம் 11.18 வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் சிறி நதியா நகைமாளிகை, சிறி ரூபா நகை மாளிகையின் இணை நிறுவனம்



# சானுயா நகை மாளிகை



எனும் புதிய தங்க நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணை கொண்டு திறப்பு விழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் தங்கள் குடும்ப சகிதமாக வருகைதந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பிதழை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

இல.1/2, சானுயா நகை மாளிகை
சிறி நதியா கட்டிடம்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்: நடராஜா சத்தியரூபன்
சிறி நதியா நகை மாளிகை,
சிறி நதியா கட்டிடம்
இல. 1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(C4527)